முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு. கருணாநிதி..

முரசு 2 | சென்னை | 22—7—55 | வெள்ளி | ஒலி 17

32. சிறைச்சாலை!

"எழுவானுக்குத் தொழுவானுக்கும் இடையிலே...
காக்கை எழுக்கு நிழலிலே...
கள்வர் புகும் வழியிலே...
கண்டாலும் 'கம்மாளர்' கண்ணிலே...
எழுபது கோடி பசும்பொன்... "

யார் கண்ணிலும் படாமல் அம்பலம், பரிமளா, துக்காராம் மூவரும் மருங்கப்பள்ளத்திற்கு இரவு வந்து சேர்ந்தார்கள். வாய்க்கால் ஓரத்திலே அமைந்துள்ள அம்பலத்தின் பங்களாவிலே ரகசியமாக இருப்பதென்ற திட்டப்படி துக்காராமும் பரிமளாவும் அங்கே வைக்கப்பட்டனர். வேலைக்கார ராமனின் கண்காணிப்பிலே விடப்பட்ட அவர்களுக்கு அவனது குறும்புத்தனமான உபசாரங்கள் தலைவேதனையுண்டாக்கின. அம்பலத்தின கட்டளைப்படி, ராமன் சமையற் காரியங்களில் ஈடுபட்டு, அடுக்களையிலே பானை சட்டிகளை உருட்டவும் ஆரம்பித்தான். சரியாக பத்தரை மணிக்கு அம்பலம் உட்பட அனைவருக்கும் சரியாக வேகாத சோற்றை வடித்து விருந்துபசாரம் செய்தான். ,ராமன் சமையல் எப்போதுமே 'நளபாக'ந்தான்' என்று கூறிக்கொண்டு, புளியில்லாத குழம்பை ஊற்றி அவர்களைத் திணற அடித்தான். பரிமளாவுக்கு இருக்கும் வேதனையில் வேகாத சோறு-புளியில்லாக் குழம்பு-இவைகளின் ருசிகளைப் பற்றி ஆராயவா நேரம்? அம்பலத்தின் பிடிவாதத்திற்காக உட்கார்ந்து எழுந்தாள். துக்காராமுக்கும் பதார்த்தங்களின் சுவை எதுவும் தெரியவில்லை. எட்டாத கனியின் சுவையை ரசிக்கப் போகிறோம் என்று நாக்கைத் தட்டிக் கொண்டிருப்பவனுக்கு ராமன் வைத்த விருந்து பெரிதாகவா தோன்றும்! அவனுக்கும் உணவு தேவையில்லாமலிருந்தது. ஆர அமர சாப்பிட அம்பலத்திற்கும் மனமில்லை. அவர் மனம் புயலால் சூழப்பட்டிருந்தது.

புதையலை எப்படியும் தனக்கு உரிமையாக்கிக் கொள்ள வேண்டுமென்ற அடங்காத ஆசையால் துடித்துக் கொண்டிருப்பவரல்லவா அவர்! தனது திட்டங்களை ஒன்றன்பின் ஒன்றாக நிறைவேற்ற வேண்டும் என்று உறுதி செய்து கொண்டார். முதலில் பரிமளா துக்காராம் உண்மையான காதலர்கள் தானு-என்று கண்டு பிடிக்கும் திட்டம்.அதற்கு, அவர்கள் இருவரையும் தனியாக பங்களாவில் விடவேண்டும்--அதே சமயம் அவர்கள் தன்னை ஏமாற்றி விட்டுப் போய்விடாமல் காவலுமிருக்க வேண்டும். அய்யோ—ஊர்ப் பெரிய புள்ளி, பொன் மலைக்கு அதிபதியாகவேண்டும் என்ற பேராசைக்கு அடிமைப்பட்டதின் காரணமாக, எவ்வளவு சங்கடமான காரியங்களில் எல்லாம் ஈடுபட வேண்டியிருக்கிறது.

"எவனோ தெரியவில்லை—திமிர் பிடித்த சோம்பேறிப் பயல். இவன் மாதிரி மைனர்கள் எல்லாம் என்னைக் கண்டாலே எழுபது அடி விலகிநடப்பார்கள். அப்படிப்பட்ட நான்; கேவலம்-இந்தக் கன்றுக்குட்டியிடம் பல்லைக் காட்ட வேண்டியிருக்கிறது" —

என்று தனக்குத் தானே எண்ணிக் கொண்டு வருத்தப்படவும் தவறவில்லை வெள்ளியம்பலம்.

ஊரிலே எத்தனையோ கல்யாணங்கள் அவரது தலையீட்டால் நின்றுமிருக்கின்றன — நடந்துமிருக்கின்றன. அப்படிப்பட்டவர், யாரோ ஒரு அனுதைக்கு பரிமளாவைத் திருமணம் செய்து வைக்க வலிய வலிய முயன்று வளைந்து வளைந்து கொடுக்க வேண்டியிருக்கிறது. இதுவும் அவரது வீராப்பு நிறைந்த நெஞ்சிலே எழுந்த புகைச்சல்தான்! ஆனாலும் பொன்குவியல் என்ற அந்த ஆசைக்கனவு, எந்தப் புகைச்சலையும் நீடிக்கவிடவில்லை.

துரையையும், பரிமளாவையும் பார்த்து. "ஜாக்கிரதையாக இருங்கள்-காலையிலே வருகிறேன். திண்ணையிலே ராமன் படுத்திருப்பான். ஏதாவது தேவையானால் சொல்லி அனுப்புங்கள்" என்று கூறிவிட்டு பங்களாவை விட்டுப் புறப்பட்டார் அம்பலம். ராமனும், ஒரு ஓட்டைப் பாயுடனும், பஞ்சு கிளம்பிய தலையணையுடனும் தன் சயனத்திற்குத் தயாரானான்.

துக்காராமுக்கோ ஆனந்தம் தாங்கவில்லை. குருடனுக்குக் கண்ணையும் திறந்து வைத்து, எதிரே பொன்னையும் கொட்டி வைத்தால் எப்படியிருக்கும்?

செவிடனுக்கு சிகிச்சை பார்த்து, கேட்கும் திறனையும் உண்டாக்கிவிட்டு, செந்தமிழிலே ஒரு பாட்டையும் இசைத்துக் காட்டினால், எப்படி இருக்கும்?

அந்த நிலைபெற்றான் துக்காராம். பரிமளாவோ, தன்னைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டிய சோதனை மிகுந்த கட்டத்திலே நின்று கொண்டிருந்தாள். அவ்ளது உள்ளத்தைப் புரிந்து கொள்ளும் சக்தியற்ற துக்காராம், அசடு வழிந்திட ஒரு சிரிப்பை வரவழைத்துக் காட்டினான். பரிமளா முதலில் பேசுவதா தான் முதலில் பேசுவதா என்ற பிரச்சினையிலே சில விநாடிகளைக் கழித்த துக்காராம்! தன்னைத் தைரியப்படுத்திக்

★ தொடர்ச்சி 4-ம் பக்கம்

புதையல்

மு. கருணாநிதி

Best copy available

'ரிங் மாஸ்டர்!'

டைரக்டர்கள் சினிமா நட்சத்திரங்களைக் கண்டுபிடிக்கிறார்கள். அவைகளிலே சில துருவ நட்சத்திரம்போல பிரகாசிப்பதுண்டு. சில துருப்பிடித்த இரும்புபோல மதிப்பிழப்பதுமுண்டு.

மோதிலால் மைந்தர் நேரு கண்டுபிடித்த அரசியல் நட்சத்திரம் **தேபர்** அவர்கள் இதில் எந்த ரகம்—என்று இன்னமும் விளங்கவில்லை. புதிராகவே இருக்கிறார், புதிய ராஷ்டிரபதி!

அவருடைய சார்லி சாப்ளின் மீசையைக் கவனிக்கும்போது, அவரை 'சினிமா நட்சத்திரம்' என்று வர்ணிக்கத் தோன்றுகிறது. ஆனால் அவரது நடவடிக்கைகளோ அவரை ஒரு 'சர்க்கஸ் நட்சத்திர'மாகவே காட்டிக் கொடுத்துவிடுகின்றன.

சர்க்கசிலே 'ரிங் மாஸ்டர்' புலியையும், ஆட்டுக்குட்டியையும் ஒரே பாத்திரத்திலே தண்ணீர் குடிக்க வைப்பான். பூனையும், எலியும் ஒன்றாகச் சேர்ந்து விளையாடச் செய்வான். தேபர்ஜி இப்பொழுது அந்த வேடிக்கைகளைத்தான் காட்டி வருகிறார்.

தமிழ் நாட்டு காங்கிரஸ் கட்சிக்கு மட்டும் லட்சக் கணக்கிலே பணமும், நிலம் வீடு வகையறுக்களும் இருப்பது நமக்குத் தெரியும். காங்கிரசின் ஒரு பிராந்தியக் கிளைக்கே இவ்வளவு சொத்து இருந்தால், டாட்டா, பிர்லாக்களின் அணைப்பிலும், அந்தரங்க உதவியிலும் வாழும் அகில இந்தியக் காங்கிரஸ் எவ்வளவு பெரிய 'கோடீஸ்வரபதி'யாக இருக்க வேண்டும்?

அதன் தலைவர் தேபர் இப்போது என்ன செய்திருக்கிறார் தெரியுமா? டெல்லியிலேயுள்ள 'பங்கி காலனி'யில் ஒரு ஓலைக் குடிசையிலே தன்னுடைய தலைமைக் காரியாலயத்தை அமைத்துக் கொண்டிருக்கிறாராம்.

கோடீஸ்வரர்களின் கட்சி குடிசைக்குக் குடிபோகிறது!

டெல்லியிலேயுள்ள மாளிகை போதாதென்று, ராஜேந்திர பிரசாத் ஹைதராபாத் அரண்மனைக்குக் குடி வரலாமா என்று யோசிக்கிறார்!

தேபரோ ஆசையை வெறுத்து, ஆண்டிவேடம் பூண்ட புத்தனுக்குப் பழிப்புக் காட்டுவதைப்போல மாளிகையிலிருந்து மண் குடிசைக்கு விஜயம் செய்கிறார்!

—இது எவ்வளவு பெரிய வேடிக்கை? தேபரைத் தவிர வேறு எந்த 'ரிங் மாஸ்டரா'ல் இவ்வளவு பெரிய அதிசயத்தைச் செய்து காட்டமுடியும்?

★

தேபர் ரிங் மாஸ்டர் மட்டுமல்ல; மாங்கொட்டையிலிருந்து மாமரம் தயாரிக்கும் மந்திரவாதியாகக் கூட சில சமயம் மாறிவிடுகிறார்.

இருநூற்றி ஐம்பது ரூபாயிலேயே எல்லோரும் வாழ வேண்டுமென்று முன்பு உபதேசித்தார். இப்போது இன்னொரு படி அதிகமாகவே சென்று, ஒவ்வொரு காந்தியவாதியும் இரண்டு வேட்டி, சட்டை, ஒரு துண்டு [அல்லது இரண்டு துண்டு, ஒரு வேட்டி, சட்டையோ—எனக்கு சரியாக நினைவில்லை!] — இவைகளுடன்தான் வாழவேண்டும்; என்றும் பேசியுள்ளார்.

பாரிசிலிருந்து எங்கள் தலைவர் நேருவுக்கு சலவை வருகிறது என்று கூறி பெருமைப்பட்ட காலம் போய், ஒரு ஜோடி வேட்டி, சட்டைகளுடன் வாழச் சொல்கிற காலம் வந்திருக்கிறது!

காந்திய நெறி பரவ வேண்டியதுதான்—நாமும் ஒப்புக்கொள்கிறோம்!

லட்சக் கணக்கில் சம்பாதிக்கும் கவர்னர் துரைகள் கவலையின்றி வாழும்போது, இந்த உபதேசத்தை தேபர்ஜி பாமர மக்களிடம் சொல்லுவதில் என்ன பயன் இருக்கிறது!

தேபர்-வடிகட்டிய காந்தி பக்தர்! இந்தத் தடவை சென்னை வரும்போது என்ன காரணமோ அவர் ஆகாய விமானத்தில் வந்துவிட்டார். இனிமேல் அவர் கட்டை வண்டியில்தான் தன்னுடைய சுற்றுப் பயணத்தை நடத்துவார்.

நமதருமை மந்திரிமார்களும் இனி அவர் வழியையே கடைப்பிடித்தாலும் நாம் ஆச்சரியப் படுவதற்கில்லை.

முதலமைச்சர் காமராசர், அசல் கலப்படமில்லாத காந்திய வழியைப் பின்பற்றி ஒரு ஒற்றைமாட்டு ரேக்ளாவிலே பவனி போகலாம்!

மந்திரி சுப்ரமணியம் மாவட்டப் பற்று மிக்கவரல்லவா? தன்னுடைய 'செவர்லெட்' காரை ஏலத்தில் விற்றுவிட்டு, நல்ல சேனாபதிக் கவுண்டர் வீட்டு காங்கேயக் காளைகள் பூட்டிய கட்டை வண்டியிலே, தன் குருநாதர் ஆச்சாரியாரையும் ஏற்றி வைத்துக்கொண்டு திக்விஜயம் புறப்படலாம்!

வாழ்க காந்தியம்!
வாழ்க தேபர் கண்ட எளிய
வாழ்க்கை முறை!

★



விஷப்பாம்பு—விடை!

பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பார்கள். அது என்னவோ என்னைப் பொறுத்தவரையிலே உண்மையான பழமொழியாகத்தானிருக்க வேண்டும். கண்காட்சி சாலைகளிலே திராவகத்திலே போடப்பட்டிருக்கும் செத்தப் பாம்புகளைக் கூடப் பார்ப்பதென்றால் எனக்குப் பயந்தான்! உலகத்திலே எத்தனையோ பயங்கரமான ஜீவன்கள் இருக்கின்றன. உலகத்தை கடவுள் படைத்தார் என்கிறார்களே; அவர் ஏன் இந்த பயங்கர ஜீவன்களைப் படைக்க வேண்டும்?—என்று நானே எனக்குள் கேட்டுக்கொள்வேன். அதிலும் குறிப்பாக பாம்புகளை இந்தக் 'கடவுள்' ஏன்தான் படைத்தாரோ?—என்று தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தேன். அந்த விழிப்பை நீக்கிடும் விதத்திலே புதிதான விளக்கமொன்று கொடுத்திருக்கிறார் நமது விவேக சிந்தாமணி அமைச்சர் பக்தவத்சலம் அவர்கள்.

"விஷப் பாம்புகளை ஏன் கடவுள் படைத்தார்?" என்று வெகுகாலமாக யோசித்தாராம். இப்போது அவருக்கு விடை கிடைத்துவிட்டதாம். நல்லவேளை; விடை கண்டுபிடித்த பிறகே நாட்டுக்குத் திரும்புவேன் என்று சபதம் செய்து விட்டு, மந்திரிப் பதவியை உதறி எறிந்து, கானகம் சென்று கடுந்தவம் இயற்றி, அதன்பிறகே விடை கண்டு திரும்பக் கூடிய கஷ்டமில்லாமல், விரைவிலேயே விடை கண்டுபிடித்துவிட்டார். என்ன தெரியுமா விடை?

"பயிர் பச்சைகளை எலிகள் நாசம் செய்து விடுகின்றன. அந்த எலிகளைக் கொல்வதற்காகவே பகவான் விஷப் பாம்புகளைப் படைத்தார்!"

இது பக்தவத்சலனாரின் திருவாய் சிந்திய திருவாசகம்.

அடாடா! எவ்வளவு பெரிய உண்மை! எத்துணை மகத்தான ஞான உதயம்! பயிர்ப் பச்சைகளை அழிப்பதற்காக எலியையும் படைத்து, அந்த எலிகளை அழிப்பதற்கு பாம்பையும் படைத்தாரே, அவரல்லவா பகவான்!

ஓகோகோ—என்ன சிரிக்கிறீர்கள்! எலியை அழிக்க பாம்பைப் படைப்பானேன்; எலியையே படைக்காமலிருந்தால் பாம்பைப் படைக்க வேண்டிய கஷ்டமில்லையே!—என்று கேட்கிறீர்களா?

பிறகென்ன? பகவான், படைப்பு வேலை செய்யாமல் வேறு வேலை செய்தால் சம்பளம் கொடுப்பார்களா? அதனால் தான், எலியைப் படைத்து பயிரை அழிக்கிறார். பாம்பைப் படைத்து எலியை அழிக்கிறார். 'சிருஷ்டிக்கும் டூட்டி' சரியாக நடந்தால்தானே சம்பளம் கிடைக்கும்.

பகவான் என்ன பக்தவத்சலமா? இவர் தான் மந்திரி வேலை பார்க்காமல், இப்படி மதவேலைகளை கவனித்தாலும் சம்பளம் கொடுக்க நாமிருக்கிறோம். பகவான் அப்படியில்லையே—"கரெக்ட்"டாக படைப்பு வேலை நடத்திக் கொண்டேயிருந்தால்தானே சம்பளம்! பாவம்; அதனால்தானே அவர் பயிரை அழிக்க எலியையும், எலியை அழிக்க பாம்பையும் படைத்து வருகிறார். இருந்தாலும் இந்த ரகசியத்தை மந்திரியார் இப்படி வெளியிலே சொல்லி, பகவானின் மானத்தை வாங்கியிருக்க வேண்டியதில்லை என்பதை மட்டும் வருத்தத்தோடு ஒப்புக் கொள்கிறேன்.

★

தலையங்கம்

காதலிலே கவிதையிலே களம் போதும் பேச்சு;
கணவனுக்கும் மனைவிக்கும் திராவிடமே மூச்சு!

சென்னை 22—7—55 வெள்ளி

ஆறு தாண்டினோம்!

தி. மு. கழகத்திற்கென வரையறுக்கப்பட்டு, போதுக் குழுவின் அங்கீகாரம் பெற்ற சட்ட திட்டங்களின்படி போதுச் செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள உரிமையின் அடிப்படையில் கழகத்தின் தலைமைச் செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. செயற் குழுவிலே அங்கம் வகிக்கும் ஒவ்வொரு உறுப்பினரும் கழகத்தைக் கட்டிக் காக்கும் பணியிலும், கழகத்திற்கு வந்திடும் நெருக்கடிகளை சமாளித்திடும் திறனிலும் ஒருவரையொருவர் மிஞ்சக்கூடிய அளவுக்கு கடமையுணர்வு கொண்டவர்கள் என்பதை நாடு நன்கறியும். இன்றைய செயற்குழுவில் அங்கம் வகிப்போரில் பெரும்பாலோர் முன்னைய செயற்குழுவிலேயும் பங்கு பெற்று கழகத்திற்கு வலிவும் பொலிவும் தந்தவர்களேயாவார்கள்.

நூற்றியிருபத்தொன்பது போதுக்குழு உறுப்பினர்களையும், ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்களையும் கொண்டு, தென்னகத்தில் முன்னணி முற்போக்குக் கட்சியாகத் திகழும் தி. மு. கழகம் தனது விடுதலைப் போராட்டப் பாதையிலே சந்தித்திருக்கும் சோதனை மிக்க கட்டங்கள் ஏராளம்! அண்ணா அவர்கள் அடிக்கடி எடுத்துக் காட்டுவது போல, தந்தையை விட்டுப் பிரியும்போது துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு வந்தவர்கள் நாம்.

1949—ஆம்; பெரியாருக்கும் நமக்குமிடையே பிரிவினை யெனும் அணை போட முடியாத காட்டாறு பெருக்கெடுத்துக் கரை புரண்ட வருடம். கண்ணீர் வெள்ளத்திலே, கொள்கை யெனும் ஓடமேறி, நம்பிக்கை யெனும் துடுப்பு கொண்டு கரை தேடிப் புறப்பட்டவர்கள், கதியற்றோர்— விதியற்றோர்— மதியற்றோர் என்றெல்லாம் கடுமொழிக் கணைகளால் தாக்குண்டவர்கள், —49க்கும் — 55க்கும் இடையே ஆறு வருடங்கள்! இந்த ஆண்டுகளிலே பிறர் நூற்றாண்டுகளிலும் சாதிக்க முடியாத பெருஞ் செயல்கள் பலவற்றை சாதித்துக் காட்டியிருக்கிறோம்! எதன் வலிமையால்? எவர் துணையால்? என்னப்பன் பணநாதன், எண்ணியபோதெல்லாம் அருள் புரியும் ஏழடுக்கு மாளிகைக்காரர்களின் தயவாலா? எதையும் இருட்டடிப்பு செய்து எத்தருக்கும் பித்தருக்கும் வாழ்வளிக்கும் தேசீய ஏடுகளின் திருவருளாலா? அவர்களின் அருள் கிடைக்காதது மட்டுமல்ல; நாம் தேடாதது! தேடாதது மட்டுமல்ல; நமக்குக் கூடாது என்று குப்பையிலே வீசி எறியப்பட்டது!

"நமக்கு நாமே!" என்று முழங்கினோம். அறிஞர் அண்ணாவைப் போதுச் செயலாளராகக் கொண்டோம். போதுக் குழு அமைத்தோம். செயற் குழு தோற்றுவித்தோம். சிங்கமென உலவினோம்—ஆறு ஆண்டுகள்! அயராத உழைப்பு! அருமையான விளைவு!

இதோ— புதிய போதுச் செயலாளர்—நாடு போற்றும் நாவலர். துணைப் போதுச் செயலாளர்-தூய்மையின் உருவம் நடராசன். போதுக் குழு, செயற் குழு முற்றிலும் புதிய அமைப்பு. முழுக்க முழுக்க ஜனநாயக அமைப்பு!

இந்த அணிவகுப்பு— தான் கடந்து வந்த ஆறு ஆண்டுப் பயணத்தைத் திரும்பிப் பார்க்கிறது. கடந்த பாதை கண்டு களிப்பும்— கடக்க வேண்டிய பாதைக்குத் தேவையான ஊக்கமும் பெறுகிறது. அந்த ஊக்கத்திற்கு உரமூட்டக்கூடிய எருவாகத்தான் அமைகின்றன கடந்த காலக் கழகத்தின் களம்புகு காதைகளும், கடமையுணர்ந்த செயல்களும்!

நாரணமங்கலம்: கழகம் பிறந்த அடுத்த ஆண்டுத் துவக்கத்திலேயே தடையுத்திரவை மீறி நாரணமங்கலத்திலே தி. மு. கழகத் தோழர்கள் கடுந் தண்டனைக்காளாகி சிறை புகுந்தனர். தொடர்ந்து **சித்தையன் கோட்டை, தென் தாமரைக்குளம்** ஆகிய ஊர்களிலே தடை நொறுக்கப்பட்டது. நமது படை வீரர்கள் சிறைக் கோட்டம் நுழைந்தனர். **குன்றத்தூரிலே** ஊரடங்கு சட்டம்! பதினாறு ரவுண்டுகள் துப்பாக்கிப் பிரயோகம்! சின்னஞ்சிறு கிராமத்திலே போலீசாரின் வேட்டை! தி. மு. கழகத் தோழர்கள் பலருக்குப் படு காயம்! சிற்றூர்- செந்நீர்க் குளமாயிற்று! என். வி. நடராசன் முதலிய பலர் சிறை வாழ்வு ஏற்றனர்! கொடுமைகள் அடுக்கப்பட்டன அவர்கள்மீது!

கருப்புக் கொடி காட்டினோம்! நெருப்புமிழும் கண்களோடு வடநாட்டின் கங்காணிகளாக தென்னகம் வந்து போகும் அந்த அன்னியர் யாவரும் நம் எதிர்ப்பு கண்டு, இங்கே உருவாகும் எரிமலையின்

குதிரைப் பட்டாளம் கொள்கை வீரர்கள்மீது ஏவப்பட்டது. கோட்டை வெளி மைதானத்திலே தடியடி தர்பார் நடத்தி குதிரைகளை விட்டு மிதிக்கச் செய்தனர். புலவர் அப்பாத்துரை போன்றோர் பூட்ஸ் கால்களால் உதைத்து உருட்டப்பட்டனர்.

தேனி! மதுரை மாவட்டத்திலே ஒரு சிற்றூர். நமது கழகக் கூட்டத்தைக் கலைத்திட காங்கிரஸ் களபதிகள்- பெருந் தலைகள் உட்பட நடத்திய பயங்கரக் கலவரம். நாடு அதிர்ந்தது அந்த நாசகாலர்களின் கோரச் செயல் கேட்டு!

ஆரிய மாயை வழக்கு! அண்ணாமீது தொடரப்பட்ட அந்த வழக்கில், அண்ணா அவர்கட்கு ஆறு மாதக் கடுங் காவல் தண்டனை விதிக்கப்பட்டது. திராவிடம் கொதித்தெழுந்தது. அண்ணா விடுதலை செய்யப்பட்டார் உடனடியாக! ஆரிய மாயை மீதுள்ள தடையை மீறி வட ஆற்காடு மாவட்டத்திலே எண்பது ஊர்களிலே அந்த நூல் படித்துக் காட்டப்பட்டது. அடக்குமுறை, தனது வாலை சுருட்டிக் கொண்டது!

1952 ஆகஸ்டு 1—அடையாளப் போராட்டமாக நாடெங்கும் இந்தி அழிப்பு போராட்டம் நடத்தப்பட்டது தி. மு. கழகத்தால்!

கல்வித் திட்ட எதிர்ப்பு! ஆச்சாரியாரின் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து பெரியதோர் கிளர்ச்சியைத் துவக்கிய பெருமை தி. மு. கழகத்தையே சாரும். அமைச்சரின் வீட்டுக்கு முன்பே மறியல். கண்ணீர்ப் புகை—தடியடிப் பிரயோகம்—மந்திரியார் வாழும் தெருவிலே மண்டைகள் நொறுங்கின! தினம் தினம் திண்தோள் திராவிட மறவர் சிறைக் கோட்டத்திற்கு இழுத்துச் செல்லப் பட்டனர்.

ரயில் நிறுத்தம்! வடவர் ஆதிக்கத்தின் மீதுள்ள வெறுப்பை உணர்த்த, நேரு துரை மகனுருக்கு கண்யம் கற்பிக்க, கழகக் காளையர்கள் நடத்திய போரிலே, ஒரே நாளிலே ஐயாயிரம் பேர் சிறையில் பூட்டப்பட்டனர். அகில மனைத்திலும் நமது கண்டனக் குரல் பற்றி பேசப்பட்டது. திராவிடப்பிரிவினை சங்கநாதம் கேளாதார் காதிலும் கேட்டது!

கல்லக்குடி:- வடவரின் பெயராம் 'டால்மியாபுரம்' வேண்டாமெனக் கூறி, தி. மு. கழகம் தொடுத்த போரிலே லால்குடி நடராசன், கேசவன் ஆகியோர் துப்பாக்கி ரவைகளுக்குப் பலியானார்கள். ரண களமானது கல்லக்குடி! அறுபத்தி நான்கு ரவுண்டுகள் போலீசார் சுட்டுத் தீர்த்தனர். கையிழந்தோர், காலிழந்தோர் ஏராளம்; ஏராளம்! அதோடு விடவில்லை; கவிஞர் கண்ணதாசன், அம்பில் தருமு ஆகியோர் மீது வழக்கு. தூத்துக்குடி தோழர்கள் மீது பயங்கரமான சதி வழக்கு—ஏறத்தாழ நூறு பேர் கூண்டிலே நிறுத்தப்பட்டனர். வழக்குகளுக்கென தி. மு. கழகம் பணந் திரட்டி, வழக்கு நடத்தும் பொறுப்புகளையும் ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலைமை.

மும்முனைப் போரிலே முன்னணி வீரர்கள் அனைவரும் சிறையிலே—அண்ணா உட்பட! ஆறு உயிர்கள் ஆச்சாரியாரின் ஆட்சிக்கு காணிக்கையாக்கப்பட்டு, அதுவும் போதாமல் குமாரவேலுவின் உயிரும் ஏழாவது காணிக்கையாக்கப்பட்டது!

ஆறே ஆண்டுகள்தான்—ஆனாலும் திரும்பிப் பார்க்கிறோம்; ஆபத்தான பாதையிலே அடி வைத்து கடந்திருக்கிறோமே; அடக்குமுறைப் பாம்புகளும், கொலை வெறி வேங்கைகளும் உலவிடும் கோர வழியிலே கொடி பிடித்து பவனி வந்திருக்கிறோமே; என எண்ணுகிறோம்-இதயம் கனக்கிறது மகிழ்ச்சியால்!

சாமானியர்கள்—'சர்'களுக்குப் பேரர்களோ—ஜரிகைத் தொப்பிகளுக்கு தாசர்களோ அல்ல! எதையும் தாங்கும் இதயம் மட்டுமல்ல; இளகிடும் இருதயமும் கொண்டு நடை போட்டிருக்கிறோம்.

கைத்தறியாளரின் கண்ணீரைத் துடைப்பதற்கென, கழகத்தின் முன்னணி வீரர்களும், செயல் மணிகளும் கைத்தறித் துணிகளைச் சுமந்து தெருவெல்லாம் சுற்றியிருக்கிறோம்.

தஞ்சையிலே புயல்! நமது நெஞ்சத்திலே பூகம்பம்! ஓடினோம்-ஓடினோம்-ஒரு அணா—இரண்டணாவாகச் சேர்த்தோம். முப்பதாயிரம் ரூபாய்—நமது சக்திக்கு மீறிய தொகை. அரசாங்கத்தின் மூலமாக அவதிப்படுவோருக்கு ஆடைகளாக அனுப்பினோம்.

துண்டோடுதான் வெளியேறினோம்; திண்டாடித் தெருவில் நிற்போம் என்றுதான் ஆருடம் கணித்தனர். தெருவில்தான் நிற்கிறோம், 'திராவிட நாடு திராவிடருக்கே' என்று கூவிக்கொண்டு—ஆயிரமாயிரம் மக்களைக் கூட்டி வைத்துக்கொண்டு!

தெருவில் நின்றபடியே சென்னை ராயபுரத்தை நோக்குகிறோம். நாம் கட்டிய கோட்டை—நமது மாளிகை—அறிவகம் — அதன் உச்சியில் பறக்கும் இலட்சியக் கொடி தெரிகிறது. அந்தக் கொள்கை மண்டபத்திலேயிருந்து வெளிவரும் தினசரி **'நம் நாடு!'**

நுங்கம்பாக்கத்திலே பெரியதோர் மைதானம், நமது கூட்டங்கள் நடத்த! நமது கொள்கை விளக்கும் நாடகங்களை திரளான மக்கள் காண!

ஆறு ஆண்டுகளில் இருபத்தி நான்கு மாவட்ட மாநாடுகள், பெரிய அளவில்! மாநில மாநாடு, நாலு நாட்கள் சென்னையில்! இதோ, அடுத்த மாநில மாநாட்டுக்கான ஏற்பாடுகள்!

அப்பப்பா! ஆறு ஆண்டுகளில எவ்வளவு சாதித்திருக்கிறோம்! அவைகளைத் திரும்பிப் பார்க்கும்போது ஏற்படும் பூரிப்பு, புதிய போதுக் குழுவிற்கும், புதிய செயற் குழுவிற்கும்—புதிய தெம்பு தருவதாக அமையட்டும்! நிச்சயம், அப்படித்தான் அமையும்!

ஆறு ஆண்டுகள்! ஆம்— **ஆறு தாண்டியிருக்கிறோம்** "மண் குதிரையை நம்பிபா?" என்றனர்! "இதுவென்ன மாயக் குதிரையா?" என அதிசயிக்கின்றனர் இப்போது! நாம் ஆறு தாண்டிவிட்ட போது!

ஆறு தாண்டியதோடு முடிவதில்லையே; நமது இலட்சியப்பயணம்! அதோ, விடுதலை! விடுதலை!! விடுதலைக் கோட்டை தெரிகிறது, அங்கே நமது வெற்றி முழக்கம் கேட்கட்டும்! கொள்கைக் குதிரைகளை முடுக்கி விடுங்கள்! கடமை, கண்யம், கட்டுப்பாடு என்ற கடிவாளத்திலும் கவனமிருக்கட்டும்!

புதிய போதுக் குழுவினரே!-புதிய செயற் குழுவினரே!-கழக மாமணிகளே! எங்கே-பொறுப்பு நிறைந்த நமது வேலைகள் வெற்றிகளைக் குவிக்கட்டும்!

புதையல்......

★ 1-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டு வாயைத் திறந்தான்.

"கண்மணி!"

பரிமளா பேசாமலிருந்தாள்.

"பரிமளா! நம்முடைய புனிதமான காதலை கடவுள் உணர்ந்து—நம் இருவரையும் எப்படி சேர்த்து வைத்து விட்டார் பார்த்தாயா?" என்று நாடக மேடை ராஜபார்ட் தோரணையிலே வசன மாரி பொழிய ஆரம்பித்தான்.

"அன்புள்ள காதலியே! ஏன் பேச மறுக்கிறாய்? வெட்கமா? உன்னுடைய வெட்கம் என் விலாவை வேலால் குத்திக் குடைகிறதே!"

இதைச் சொல்லிக் கொண்டே அவன் அவளிடம் நெருங்கினான்.

இதுவரையில் பொறுமையாக நின்று கொண்டிருந்த பரிமளா, துக்காராமை இரக்கத்தோடு பார்த்து,

"துக்காராம்!" என்றாள்.

"என்ன, துக்காராமா? கணவனைப் பெயர் சொல்லி கூப்பிடலாமா? பாபம்! பாபம்!!" எனக் கத்தினான் அந்தப் பைத்யக்காரன்.

"நான் சொல்வதைக் கேள்! என்னைப் போலவே நீயும் தொல்லையில் அகப்பட்டுக் கொண்டிருக்கிறாய். உன்னுடைய கஷ்டம் எனக்குத் தெரிகிறது இந்த நேரத்தில் நாமிருவரும் கொஞ்சம் புத்திசாலித் தனமாக நடந்து கொள்ள வேண்டும்" என்றாள் பரிமளா.

"என்ன, என்னை மரியாதையில்லாம, நான் நீ என்று பேசுகிறாய்?"

சொல்வதை முழுதுங் கேள், துக்காராம். எனக்கு உன்னிடத்திலே கொஞ்சமும் அன்பு இல்லை—பிரியம் இல்லை—என்பது உனக்கு முன்பே தெரியுமல்லவா?"

"ஆகா! எனக்கு மயக்கம் வருகிறதே!"

"இப்படியெல்லாம் உளராதே! வெள்ளியம்பலத்திடமிருந்து தப்புவதற்காக, ஏதோ ஒரு பொய் சொல்லிவைத்தேன், உனக்கும் ஒரு சிறிய பாடம் கிடைக்கட்டும் என்று! அந்த வேடிக்கை, இப்போது இவ்வளவு வேதனையாக வளர்ந்துவிட்டது. நிச்சயமாக நம்பு; எனக்கு உன்மீது துளியும் விருப்பமில்லை!"

"அப்படியெல்லாம் சொல்லாதே பரிமளா! நான் உனக்காக உயிரை விடவும் தயாராயிருக்கிறேன். என் மனம் உன்னை நாடி, 'ஹேண்டில் பார்' இல்லாத சைக்கிள்போல அலைந்துகொண்டேயிருக்கிறது!"

துக்காராம், பரிமளாவைத் தொட முயன்றான். பரிமளா, கோபத்தோடு 'தூரப் போ' என்று அதட்டினாள். துக்காராம் கேட்கவில்லை. கிடைத்திருக்கிற அருமையான சந்தர்ப்பத்தை நழுவ விட அவனுக்கு மனமில்லை. பரிமளாவைப் பிடித்து தன்பக்கம் இழுத்தான். பரிமளா, தன் பலங்கொண்ட மட்டும் அவன் கன்னத்திலே ஓங்கி அறைந்தாள். துக்காராம் அப்படியே அசைவற்று நின்றான் சிறிது நேரம். அந்த அடி அவனது புத்தியை ஒரு நிலைப் படுத்திவிட்டது.

"பரிமளா! போதும்—இனியும் உன் கைவரிசையைக் காட்டாதே! என்னால் தாங்கமுடியாது" என்று கூறிக் கொண்டே வேறு பக்கம் விலகிப் போய் நின்று கொண்டான். பரிமளாவுக்கு அவன் மீது பரிதாப உணர்ச்சி ஏற்பட்டது.

"இப்போதாவது நான் சொல்வதைக்கேள், துக்காராம்!" என்றாள்.

"என்ன சொல்லுகிறாய்? வாயால் எவ்வளவு வேண்டுமானாலும் சொல்! கையால் மட்டும் சொல்லாதே!" என்றான் பரிதாபமாக!

"நாமிருவரும் அம்பலத்திடமிருந்து விடுதலை பெற வேண்டாமா?"

"நிச்சயமாக!"

"அப்படியானால், பெயரளவுக்கு உன் காதலி என்று நீ சொல்ல வேண்டுமே தவிர, இப்படியெல்லாம் என்னிடம் தவறாக நடக்கக் கூடாது!"

"ஏன்? எதற்காக? பெயரளவுக்கு காதலி என்று சொல்லி, உனக்கு ஏன் நன்மை செய்ய வேண்டும்? உனக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று உண்மையைக் கூறிவிட்டு, நான் பொழுது விடிந்ததும் ஓடிப் போகிறேன் பார்!"

இதைக் கேட்டதும் பரிமளாவுக்குத் தூக்கி வாரிப் போட்டது. எங்கே, அம்பலத்திடம் காட்டிக் கொடுத்து விடுவானோ என்ற அச்சம் தலைதூக்கியது. அவன் சொல்வது சரியென்று அம்பலத்திடம் ஒப்புக் கொண்டால், துரையை சிக்க வைக்கத் தன்னை கருவியாகப் பயன் படுத்துவார் வெள்ளியம்பலம்—என்ற திகிலும்கூடவே பிறந்தது. அதற்காக, துரையைக் காப்பாற்றுவதற்காக, துக்காராமின் இஷ்டத்துக்கு இணங்குவதா? இந்தக் கேள்வியை எண்ணிப் பார்க்கவும் இயலவில்லை பரிமளாவுக்கு!

பரிமளா, ஏதாவது சாதகமான பதில் சொல்லுவாளா என்று எதிர்பார்த்துக் கொண்டேயிருந்தான் துக்காராம். எதிர்பார்த்து, எதிர்பார்த்து, கடைசியில் தன்னையுமறியாமல் அப்படியே உட்கார்ந்தபடியே உறங்க ஆரம்பித்து விட்டான். பரிமளா, இரவு முழுதும் கண்ணயராமல் கவலைக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்தாள். தெருத் திண்ணையிலே ராமன் விடும் குறட்டை சப்தமும், வயல்களின் ஓரங்களிலேயிருந்து தவளைகள் எழுப்பும் சப்தமும் ஒன்றையொன்று வெல்ல முயன்று கொண்டிருந்தன.

இரவு முழுதும், யாருக்கும் தெரியாமல் அந்த பங்களாவைக் காவல் காத்துக் கொண்டு சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்த அம்பலத்திற்கு, பரிமளா, துக்காராம் உரையாடல்களின் மூலம், உண்மை புலனாகிவிட்டது. இருவரும் காதலர்கள் அல்ல; பரிமளா தன்னை ஏமாற்றி விட்டாள் — என்ற கோபம் வேறு பொங்கியெழுந்தது. துக்காராமின் மீது அவருக்கிருந்த சிறிதளவு மதிப்பும் சிதறிப் போய் விட்டது. காரியமிருக்கிறது என்பதற்காக அவனைக் கட்டியழுதார். காலையில் அவன் முகத்தில் காரி உமிழ்ந்து, "போடா! போக்கத்தவனே!" என்று தரத்தி அடிக்க வேண்டும் என்று தீர்மானம் செய்து கொண்டார்.

பொழுதும் விடிந்தது. துக்காராம் விழித்துப் பார்த்தான். எதிரே பரிமளா இருந்தாள். எதிர்பார்த்த இன்ப இரவு ஒரு கனவாகவே போய்விட்டதை யெண்ணி ஏங்கினான். பரிமளா, அவனைப் பார்த்து "என் மீது கோபப்பட வேண்டாம் துக்காராம். ஏதோ ஆத்திரத்திலும் அவசரத்திலும் அடித்து விட்டேன். இரண்டு நாள் தவணை கொடுங்கள். உங்கள் விருப்பத்தை நிறைவேற்ற முடியுமா என்று யோசனை செய்கிறேன்." என்று நயமாகக் கேட்டுக் கொண்டாள்.

முரட்டுக் குரல் படைத்த வெள்ளியம்பலத்தின் வாய்ஜாலங்களிலே மயங்கிவிட்ட அந்த முட்டாள் வாலிபன், மொழியோ—தேனோ-என ஐயுறும் வகையில், குழலோ—குயிலோ என்று ஆராய்ந்திடும் வகையில் சொல் உதிர்த்திடும் சொக்கத் தங்கம் நிகர் சுந்தரியின் ஏமாற்று வார்த்தைகளுக்கா அடிமையாகமாட்டான்! முதலில் தயங்கினான்-பிறகு மயங்கினான்-நெருங்கமட்டும்விடவில்லை அவள்! வெற்றிபெற்றுவிட்டோம் என்ற அணுவளவு மகிழ்ச்சியோடு கதிரவன் வரவை எதிர்பார்த்திருந்தாள். மகனைக் காணோமே என்று மார்பிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்திடும் மாதா, அதே ஊரிலேதான் ஒரு மூலையிலே இருக்கிறாள்—மகளோ, இங்கு சிறைபடுத்தப்பட்டிருக்கிறாள். இரவெல்லாம் கண்மூடாதிருந்த வெள்ளியம்பலமும் பங்களாவின் வாயிலிலே வந்து உட்கார்ந்து கொண்டு, சிந்தனைகளை ஓடவிட்டுக் கொண்டிருந்தார்.

துக்காராமை நம்பிப் புண்ணியமில்லை; இனி துரையைத்தான் பிடிக்கவேண்டும். அது எப்படி முடியும்? அவன் எங்கே ஓடி ஒளிந்திருக்கிறானோ- என்றெல்லாம் குழம்பிக் கொண்டேயிருந்தார்.

காலையிலே, பரிமளா, துக்காராம் இருவரிடமும் தன் கோபத்தைக் காட்டிக்கொள்ளவேயில்லை. இரவு நடந்தவை தனக்கு எதுவும் தெரியாது என்பது போலவே நடந்து கொண்டார். துக்காராமும் பரிமளாவின் வார்த்தையை நம்பி, அவளிடம் பழையபடியே பேசிப் பழகினான். மாலையும் வந்தது. பங்களா வாசலில் உட்கார்ந்திருந்த அம்பலத்திடம், ராமன் ஓடிவந்து, 'தாண்டவன் வருகிறார்' என்று பரபரப்புடன் கூறினான். உடனே, அம்பலம் பரிமளாவையும், துக்காராமையும் உள்ளேயே ஜாக்கிரதையாக இருக்கச் சொல்லி விட்டு, தாண்டவனிடமிருந்து ஏதாவது புதிய சேதிகள் கிடைக்குமா என்ற ஆவலோடு வரவேற்க எழுந்தோடினார்.

"என்ன; பரிமளா அகப்பட்டாளா?" என்று அவசரஅவசரமாகக் கேட்ட அம்பலத்திடம், தாண்டவன் உதட்டைப் பிதுக்கிக் கொண்டே 'இல்லை' என்று ஈனசுரத்தில் பதில் அளித்தார்.

"போலீஸ் எல்லாம் தேடினதாகக் கேள்விப்பட்டேனே" என்றார் அம்பலம்.

"தேடினது உண்மைதான்—கையிலே அகப்பட்டாள். பிறகு எங்களையும் ஏமாற்றிவிட்டு எங்கேயோ மறைந்து விட்டாள்" என்றார் தாண்டவன்.

"இது என்னய்யா வேடிக்கை? கையிலே அகப்படுவதாவது; மறைவதாவது!"

"இது மட்டுமா வேடிக்கை? அவளைத் தேடிப் போனதிலே ஒரு கொலைக் கேஸ் கிடைச்சுது போலீசுக்கு!"

"கொலைக் கேசா?"—ஆச்சரியத்தோடு கேட்டார் அம்பலம்.

"ஆமாம்—புதுப்பட்டினத்திலே பரிமளாவைப் பிடித்தோம். அவள் தன்னை யாரோ ஒருவன் கெடுக்க முயன்றதாகவும், அப்போது ஒரு கிழவனும் ஒரு வாலிபனும் மீட்க வந்ததாகவும், அதனால் சண்டை நடப்பதாகவும் சொன்னாள். நாங்கள், அவள் சொன்ன இடத்துக்கு ஓடினோம். அங்கு யாருமில்லை. ஒரு கைமட்டும் வெட்டப்பட்டுக் கிடந்தது. அப்போது, பரிமளா எல்லோர் கண்ணிலும் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டுப் போய் விட்டாள். பிறகு விசாரித்ததில், அது துரை என்பவனின் வீடு என்று தெரிந்தது."

"உம்; அப்புறம்என்னநடந்தது?"

"அப்புறம் என்ன? நான் போன விஷயம் நடக்கிலே! போலீசுக்கு புது கேஸ் கிடைச்சுது!"

"அந்தக் கேஸ்தான் இப்ப எதுவரையிலே இருக்குது?"

"எதுவரையிலே இருக்கு? இன்னைக்கு மத்யானம் பனிரெண்டு மணிக்கு, அந்தத் துரை என்பவனையும், மாயாண்டிக் கிழவனையும் போலீஸ்காரங்க கைதுசெய்து கொண்டு போயிருக்காங்க!"

இதைக் கேட்டதும், அம்பலத்தின் முகம் மாறிவிட்டது. கொலை வழக்கில் துரையும், அந்த மாயாண்டியும் சிக்கி, தண்டிக்கப்பட்டுவிட்டால், பிறகு எப்படி புதையல் ரகசியத்தைத் தெரிந்து கொள்ளமுடியும்?—என்ற கேள்வி அவரது நெஞ்சைப் பிளந்தது. தாண்டவனோ, அம்பலத்திற்கு ஏற்பட்டிருக்கிற மனக் குழப்பத்தை அறியாமல் அந்தக் கொலைக் கேசைப் பற்றி அளந்து கொண்டே போனார்.

கேஸ் விசாரணைக்கு வந்தால், தானும், தன் மகனுங் கூட ஒரு சாட்சியாகப் போக நேரிடுமென்றும், எப்படியும் கேசைக் கண்டு பிடித்து விடுவார்கள் என்றும், தாண்டவன் வழக்கு பற்றிய விபரங்களை விளக்கினார். அம்பலத்தின் செவியில் இவையெல்லாம் ஏறவில்லை. தாண்டவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு மீண்டும் யோசனையில் ஆழ்ந்தார். 'துரையும், கிழவரும் விடுதலை பெற வேண்டும். அப்போதுதான் புதையலைக் கண்டு பிடிக்கலாம். இந்த துக்காராமை, முன்பு நினைத்ததுபோல் துரத்திவிடுவதும் தவறான காரியம். இவன் பரிமளாவின் காதலன் இல்லாவிட்டாலும், புதையல் ரகசியம் தெரிந்தவன். அதுவுமன்றி, துரையை விடுவிப்பதென்றால் அவனுக்கு பதிலாக இன்னொருவன் மீது குற்றச் சாட்டை சுமத்த வேண்டும். அதற்கு சரியான பலிக்கடா இந்த துக்காராம்தான்! இவனை எப்படியாவது கொலை வழக்கில் சம்பந்தப்படுத்திவிட்டால், புதையலுக்குகூட பங்குக்கு வரமாட்டான்.'

இப்படியெல்லாம் நினைவுச் சுழல்கள் எழுந்தன.

பரிமளாவைத் தனியாகக் கூப்பிட்டு, அவளிடம், துரையும் கிழவரும் கைதாகிவிட்ட செய்தியை அம்பலம் கூறினார். பரிமளாவினால் சமாளிக்க முடியவில்லை. "அய்யோ! அத்தான்!" என்று அலறிவிட்டாள். அம்பலம், அவளிடம் இரவு நடந்தவை எல்லாம் தனக்குத் தெரியுமென்றும், துரையை விடுவிப்பதென்றால், தான் சொல்கிறபடி கேட்கவேண்டுமென்றும் கூறினார்.

"துரை விடுதலையாக வேண்டுமென்றால், துக்காராம் தூக்கு மேடைக்குப் போய் ஆகவேண்டும்" என்றார் அம்பலம்.

"அய்யோ பாபம்—அப்பாவியாயிற்றே துக்காராம், வேண்டாம். வேறுவழி யோசனை செய்யுங்கள்" என்றாள் பரிமளா!

"வேறுவழி கிடையாது. உன் பிரிய காதலன் உயிர் பிழைக்க ஒரேவழி—நீ என் வார்த்தைகளைக் கேட்பதுதான்!" என்று அழுந்தத் திருத்தமாகக் கூறினார் அம்பலம்.

"சரி சொல்லுங்கள்" என்று அவரது பேச்சைக் கேட்க ஆயத்தமானாள் பரிமளா.

[வளரும்]

சுந்தரம் திறந்த மாடியில் உலாவிக் கொண்டிருந்தார். பிறைச் சந்திரன் மேகக் கூட்டத்தினுள் மறைந்தும் மறையாமலும் மங்கலான ஒளியைப் பரப்பிக் கொண்டிருந்தான். வெப்பமான மூச்சுக் காற்று அவருடைய உள்ளக் கொந்தளிப்பின் சாயலாக வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. உலகமே மென்மையான நிலவொளியின் இன்ப அணைப்பில் மயங்கிக் கிடந்தது. ஆனால் சுந்தரத்தின் மனம் மட்டும் இருண்ட எண்ணங்களில் இடறி இடறி விழுந்து கொண்டிருந்தது.

✶

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்; அப்பொழுது அவருக்கு வயது இருபத்தேழு. அந்த இளம் வயதில் — வாழ்க்கையின் முகப்பில் நின்றுகொண்டு வருங்காலத்தைப் பற்றி கோடானு கோடி கற்பனை உலகங்களை அமைத்துப் பார்த்து மகிழ வேண்டிய சமயத்தில்—அழகுக்கு இலக்கணம் வகுத்தது போன்ற அவருடைய மனைவி கோமளா காலமானுள். உலகின் மக்கள் பிரச்சினைக்கு முடிவு கட்டும் வகையில் 'காலரா தேவி' செய்த கோர நர்த்தனத்தில் கோமளாவும் அகப்பட்டு ஒன்றிக் கலந்து போனுள்.

மனிதன் கொள்கையளவில் பேசுகின்ற பொதுமை யுணர்ச்சியை நடைமுறையில் செயல்படுத்தும் இயற்கை, சுந்தரத்தின் மனைவியைக் 'காவு' கொண்டதோடு நில்லாமல், அவலட்சணத்தின் 'மாடலாக' விளங்கிய அவர் வீட்டு வேலைக்காரி செல்லியையும் அந்தப் பொல்லாத நோயால் பலியாக்கிவிட்டது. செல்லியின் கணவன் இருசப்பன் மனைவியின்மீது மட்டற்ற பிரேமையுடையவன். ஆனால் மனைவி காலமானவுடன், அது வாழ்க்கையின் மாற்ற முடியாத உண்மை என்பதை உணர்ந்து, சில மாதங்களிலேயே வேறொரு பெண்ணை மணந்து, வாழ்க்கையில் ஒரு புது அத்தியாயத்தைத் துவக்கி விட்டான். ஆனால், சுந்தரம், 'ஏக பத்தினி விரத'ராக இருக்க எடுத்த முயற்சிகளையெல்லாம் எத்தனை சூருவளிகள் தோன்றி எதிர்த்தன!

பதினைந்து ஆண்டுகளாகச் சுந்தரத்தின் விரதம் பிடிவாதமாக நிறைவேறியதற்குக் காரணங்கள் இல்லாமல் இல்லை. கோமளா இறந்தாளே தவிர, தன் அழகுக்கு வாரிசாகவும், கணவனுக்கு ஆறுதலாகவும் குழந்தை சுகுணுவை ஒப்படைத்துவிட்டுத்தான் சென்றுள். மகளின் எள்ளுப் பூ நாசியிலே, எழில் தளும்பும் கண்களிலே, கொவ்வைச் செவ்வாய்க் குமிழ்ச் சிரிப்பிலே, அதன் சாயலிலே—மனைவி கோமளாவைக் கண்டார் சுந்தரம். ஆறுதல் அடைந்தார். கணவன் என்ற நிலை வாழ்க்கையிலே உண்டு, இருந்தது, என்பதை அறவே மறந்தார். பெண்ணைப் பேணி வளர்க்கும் தந்தையின் பாசத்தில் அவர் உள்ளம் சாந்தி கண்டது.

கோமளா இறந்த பொழுது சுகுணுவுக்கு வயது நாலு. வெம்மைக்கும் குளுமைக்கும் வேறுபாடு தெரியாத பருவம்—உலகின் பேத்து மாத்துகளை உணர முடியாத பருவம்—கண்டதைக் கண்டபடியே நம்பும் குழந்தைப் பருவம். அந்தக் குழந்தையிடம் அன்பைச் செலுத்திய சுந்தரமும் குழந்தையானுர். தாம்பத்ய இச்சையை மறந்தே போனுர்.

ஒரு நாள்—

''அப்பா!''

''ஏண்டா கண்ணு?''

''எதிர் வீட்டு அன்பு இருக்கால்லப்பா...''

''ஆமா, அதுக்கு என்ன இப்போ...?''

''அவளோட அம்மா ஊரிலிருந்து வரப்போருங்களாம் அப்பா...''

மௌனம்...???

''ஏம்ப்பா பேசாமெ இருக்கே ......?''

''அதான் நீ சொல்றதை கேட்டுக்கிட்டே இருக்கேனே...''

''அன்போட அம்மா வரும்போது, பொம்மை, பழம், மிட்டாய் எல்லாம் வாங்கிட்டு வருவாங்களாம்ப்பா...!''

''அப்படீன்னு உனக்கு யாரு சொன்ன?''

''அன்புதாம்ப்பா சொன்னு...... அப்பா, எனக்கு ஒரு சந்தேகம்... கேட்டால் பதில் சொல்லுவியா ......?''

''ஊம்''

''நம்ப அம்மா வரும்போதும் அதெல்லாம் வாங்கிட்டு வருவாங்களாப்பா...?''

''சுகுணு, பார், மணி ரொம்ப ஆச்சு. நான் ஒரு கதை சொல்றேன், தூங்கு பார்க்கலாம்...''

''போ அப்பா; நான் எப்பொ அம்மாவைப் பத்திப் பேசினுலும்,

நீ கதை சொல்ல ஆரம்பிச்சுடறே ......''

குழந்தையின் ஏக்கம் சுந்தரத்தைப் பல முறை இம்மாதிரி மடக்கி இருக்கிறது. அவர் பெருமூச்சு விடுவார். இரண்டு சொட்டுக் கண்ணீர் அவர் கண்களிலிருந்து உதிர்ந்து விழும்!

அவர் சுகுணுவை எவ்வளவோ பாடுபட்டு வளர்த்தார். தாயில்லாக் குறையை அவள் உணராமல் இருக்க வேண்டும் என்பதற்காக அவர் செய்த முயற்சிகள் பல. சித்தார்த்தன் துறவியாகிவிடுவான் என்பதை ஆருடக்காரன் கூறக் கேட்ட சுத்தோதனன், சித்தார்த்தனைப் போக மாளிகையில் சிறைப்படுத்தினுனுமே, அந்த முயற்சியில்தான் சுந்தரமும் ஈடுபட்டார். தாய்மைப் பரிவை மகளிடம் கொட்டினுர். மகளிடம் காட்டும் அன்பில் பெற்ற அமைதி மட்டும், அவர் வாழ்க்கையைப் பூரணமாக்கச் சக்தியற்றிருப்பதைப் பல சந்தர்ப்பங்களில் உணர்ந்தார். மகளிடம் அவர் வைத்திருந்த ஆசை, பாசம் இத்தனைக்கும் அப்பால் ஏதோ ஒரு சூன்யம் தட்டுப்பட்டுக் கொண்டிருந்தது. அவருடைய மனவெளியின் மூலை முடுக்குகளிலெல்லாம் வியாபித்து நின்று ஆறுதலளித்த சுகுணுவும்எட்டிப் பிடிக்க முடியாத சூன்யமல்லவா அது? ...ணு.

அந்த சூன்யம்......?

அவருடைய உள்ளத்தின் ஆழத்தில் மோதிக் குழப்பம் விளைவித்துக் கொண்டிருந்த அந்த வேதனை சில சமயங்களில் சீறி எழும். உடனே சுகுணுவை நினைத்துக் கொள்வார். பெண்ணின் முகமும், பிரிந்த மனைவியின் நினைவும் அவர் தாபத்தைத் தணிக்கும் மருந்துகளாயின. மனத்தை அறிவைத் தூண்டும் நூல்களில் ஈடுபடுத்துவார். ஆர்ப்பரித்த தாபக் கடல் ஒருவாறு அமைதி அடையும்.

ஒரு நாளா, ஒரு வாரமா? இப்படிப் பதினைந்து ஆண்டுகள் சென்றன. இந்த நீண்ட காலத்தில் அவருக்கு ஏற்பட்ட சோதனைகள் அநேகம். ஒரு சமயம்—

அவர் சினிமா பார்க்கப் போயிருந்தார்; மகளுடன்தான். அப்பொழுது சுகுணுவுக்கு வயது ஆறு. கொட்டகையில் ஏராளக் கூட்டம். காரணம், பல நட்சத்திரங்கள் அப்படத்தில் மின்னுவதாக விளம்பரம். சுந்தரம் உயர்ந்த வகுப்பு ஒன்றுக்கு 'டிக்கெட்' வாங்கியிருந்தார். இடம் வசதியாக இருந்தது. விளக்குகள் அணைந்து படமும் ஓட ஆரம்பித்தது. கொஞ்ச நேரத்திற்கெல்லாம் அவர் மடியில் சாய்ந்து சுகுணு தூங்க ஆரம்பித்தாள். படத்தில் ஒரு 'லவ் சீன்'. அது ஒரு ஹாலிவுட் படம். கேட்கவா வேண்டும்? டைரக்டர் தன் 'ஹெவ்லாக் எல்லிஸ்' அறிவை யெல்லாம் காட்டி, சோபிக்கச் செய்ய வேண்டிய கட்டமல்லவா அது? அவர் முழுத் திறமையையும் காட்டியே விட்டார். கதாநாயகியின் உடையை 'ரேஷன்' செய்து, 'செக்ஸ் அப்பீல்' அமர்க்களப்படுத்தியிருந்தார். டைரக்டரின் திறமையையும், கதாநாயகியின் 'நடிப்புக்கலை'யையும், விசிலடித்தும் ஊளையிட்டும் பாராட்டுதல்களை 'ரசிகர்கள்' தெரிவித்துக் கொண்டனர். அதிக அழுத்தத்தில் அடைக்கப்பட்டிருக்கும் வாயு, சிறிது உஷ்ணம் ஏற்பட்டாலும் சோடாபுட்டியை உடைத்துக் கொண்டு வெளிக் கிளம்புவதுபோல, சுந்தரத்தின் உள்ளத்தின் அடித்தளத்தில் அமிழ்ந்து கிடந்த உணர்ச்சிகள் கொப்பளித்து வெளிக் கிளம்பின. அவர் ஏதோ ஒரு இன்பவேதனை அனுபவித்துக் கொண்டிருந்தார்.

மீண்டும் விளக்குகள் எரிய ஆரம்பித்தன. சுந்தரம் சுற்று முற்றும் பார்த்தார். அவருக்கு அடுத்த நாற்காலியில் 'வர்ணப்பூச்சு அழகி' ஒருத்தி ஒயிலாகச் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள். சுந்தரம் ஒரு பெருமூச்சு விட்டார். அந்தப் பெண் லேசாகத் தலையைத் திருப்பி, சுந்தரம் அவர்களை, விழிக் கோணத்தால் பார்த்தாள். சுந்தரத்தின் நெஞ்சு படபடத்தது. சுகுணு தூங்கிக்கொண்டிருந்தாள்!

விளக்குகள் அணைந்தன. படம் மீண்டும் ஓட ஆரம்பித்தது. காதலி காதலனோடு பிணங்கிக் கொண்டு நிற்கிருள். காதலன் அவள் மனத்தை மகிழ்விக்க, அவளது அழகை சிருங்கார ரசம் ததும்ப வருணிக்கிருன்: காதலி ஊடல் நீங்கிப் புன்முறுவல் பூக்கிருள்.

சுந்தரத்தின் தோளோடு இன்னொரு மென்மையான தோள் உராய்ந்தது. அடுத்த நாற்காலியிலிருந்து வந்த ஆக்கிரமிப்பை சுந்தரம் விரும்பிய தோடல்லாமல்,

★ தொடர்ச்சி 8-ம் பக்கம்

பி.சி.கணேசன்
பி.எஸ்ஸி;பி.டி.

தி. மு. கழக தலைமைச் செயற்

தி. மு. க. பொதுக் குழு உறுப்பினர்கள் — 129 பேர்.

தேர்ந்தெடுக்கப்பட்டோர்

சென்னை மாவட்டம்

இளம்பரிதி (செயலாளர்)
இரா. நெடுஞ்செழியன்
என். வி நடராசன்
டி. வி. நாராயணசாமி
காஞ்சி-மணிமொழியார்
கே. எம். கண்ணபிரான்
தோழியர் சத்தியவாணிமுத்து
தோழியர் அலமேலு அப்பாதுரை
ஆர். டி. அரசு
சி. டி. டி. அரசு
மு. புரட்சிமணி
கே. கோவிந்தசாமி

தஞ்சை மாவட்டம்

என்.எஸ்.இளங்கோ(செயலாளர்
மு. கருணாநிதி
கே. கே. நீலமேகம்
பி. நாராயணசாமி
அடைக்கலம்
என். கிட்டப்பா
ஏ. சந்தானம்
எஸ். பெத்தண்ணன்
வி. சுப்பிரமணியம்
வி. பராங்குசம்

திருச்சி மாவட்டம்

ஏ. பி. தர்மலிங்கம் (செயலாளர்)
எம். எஸ். மணி
ஜி. பராங்குசம்
ஐ. எம். ஷெரிப்
எஸ். நெடுமாறன்
எஸ். ஏ. ஜி. ராபி
டி. பி. மூர்த்தி
டி. கே. திராவிடமணி
முத்துக்கருப்பன்
டி. பி. அழகமுத்து

மதுரை மாவட்டம்

எஸ். முத்து (செயலாளர்)
எம். எஸ். இராஜேந்திரன்
கு. ப. ம. தர்மன், [illegible]
தா. ஆவுடையப்பன்
ல. தனுஷ்கோடி
கே. விக்ரமசந்தராசன்
கே. ஏ. கலியபெருமாள்
எம். எஸ். பாக்ராஜ்
ஜி. கந்தசாமி
இருளப்பன்

கோவை மாவட்டம்

க. வெ. கி. சம்பத் (செயலாளர்)
கே. ஏ. மதியழகன்
எஸ். ஏ. இராசமாணிக்கம்
எஸ். அப்பாவு
கோவை செழியன்
ப. நாராயணன்
வி. சண்முகசுந்தரம்
பி. பொன்னுசாமி
பி. என். இராமாநுஜம்
எஸ். எம். [illegible] கந்தன்

சேலம் மாவட்டம்

ஜி.பி.சோமசுந்தரம்(செயலாளர்)
ப. கண்ணன்
சிற்றுளி அ. சுப்ரமணியம்
[illegible] ஆர். [illegible]
எம். டி. சுப்பிரமணியம்
ப. இராமலிங்கம்
பி. எம். குப்புசாமி
இரா. தாண்டவன்
கே. பெருமாள்
எச். எல். முருகேசன்

நெல்லை மாவட்டம்

கே. வி. கே. சாமி (செயலாளர்)
எம். எஸ். சிவசாமி
வீரபாகு
டபிள்யூ. டி. துரைசாமி
கே. செல்லையா
பி. எஸ். கே. ஜெயபால்
சு. கந்தசாமி
மு. சபாபதி
டி. ஆர். சுப்பிரமணியம்
தனசேகரன்

இராமநாதபுரம் மாவட்டம்

இ. ல. ம. சௌந்திரபாண்டியன் (செயலாளர்)
ஏ. வி. பி. ஆசைத்தம்பி
எம். எஸ். இராமசாமி
எஸ். எஸ். தென்னரசு
முகவை—ஆர். எஸ். பாண்டியன்
சிவசண்முகசுந்தரன்
சு. பாலகிருஷ்ணன்
நவமார்க்கண்டேயன்
உத்தண்டன்
என். கே. குருசாமி

வடார்க்காடு மாவட்டம்

முல்லை-சத்தி (செயலாளர்)
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்
போளூர்—கே. சுப்பிரமணியம்
முல்லை - வடிவேலு
ஆற்காடு—வில்வம்
கருத்தோவியன்
க. நெடுஞ்சோழன்
எம். ப. சாரதி
எஸ். என். ராசன்

தென்னார்க்காடு மாவட்டம்

இரா. சாமபசிவம் (செயலாளர்)
தில்லை-வில்லாளன்
ச. சிவப்பிரகாசம்
க. அறிவழகன்
சி. முனுசாமி
பி. சொக்கலிங்கம்
ஏ. தங்கவேல்
ந. நாச்சியப்பன்
இரா. தேவநாதன்
டி. என். ஜி. அண்ணாமலை

செங்கற்பட்டு மாவட்டம்

கே. டி. எஸ். மணி (செயலாளர்)
சி. என். அண்ணாதுரை
ஈழத்து அடிகள்
இராம. அரங்கண்ணல்
சி. வி. எம். அண்ணாமலை
பா. சு. மணி
என். ஜி. கண்ணப்பன்
ஏ. கிருஷ்ணன்
டி. கே. போருரான்
ஒய். என். இராமலிங்கம்

நாஞ்சில் மாவட்டம்

வி. எம். ஜான் (செயலாளர்)
இ. மகேந்திரன்
சு. வன்னிய பெருமாள்
ஏ. குமாரவேல்
எம். இராசகோபால்
பி. எம். கண்ணு
எம். குமாரசாமி
ஜே. டேவிட்
வை. சுப்ரமணியம்
பி. பத்மநாபன்
ந. நடராசன்

நியமிக்கப்பட்டோர்

தோழர் அ. பொன்னம்பலனார்
„ காஞ்சி-கலியாணசுந்தரம்
„ ஆர். பாலகுருசாமி
[illegible] ட்டு பள்ளியம்பல் [illegible] யழகன்
களிலே மயங்கில [illegible]
ஆர். இராமசாமி
ஜி. இராமச்சந்திரன்

★

பொதுச் செயலாளர் :

நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

தி. மு. கழகத்தின் பொதுச் செயலாளராக ஏப்ரல் 24-ம் நாள் சென்னையில் நடைபெற்ற பொதுக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டார். அண்ணாமலைப் பல்கலைக் கழகம் அளித்த நன்முத்து. 1942-ம் ஆண்டின் துவக்கத்திலேயிருந்து பொதுப் பணியில் ஈடுபட்டு சலியாது உழைத்து வருகிறார். 'மன்றம்' எனும் இலக்கிய ஏட்டின் ஆசிரியர்.

அண்ணா பொதுச் செயலாளராகப் பணியாற்றியகாலை இவர் துணைப் பொதுச் செயலாளராகப் பணியாற்றினார். கவர்னர் ஜெனரல் கருப்புக் கொடி நிகழ்ச்சியின் போதும், மும்முனைப் போராட்டத்தின் போதும் சிறைபுகுந்தவர். தேனி, கலவரத்தின்போது இவரது உயிரைப் பறிக்க எதிரிகள் செய்த முயற்சி பலிக்கவில்லை. இவரது சொந்த ஊர், திருவாரூருக்கு அருகேயுள்ள வடகண்டம்.

★

துணைப் பொதுச் செயலாளர் :

என். வி. நடராசன்

குன்றத்தூர் போராட்டத்தைப் பற்றி நினைப்பவர்கள், நடராசன் அவர்களை நினைக்காமலிருக்க முடியாது. காங்கிரசிலே தீவிரமாகப் பணியாற்றி, முதல் இந்தி எதிர்ப்புப் போரின் போது, நமதியக்கத்திலே ஈடுபட்டு இடையறாது உழைத்துவரும் இலட்சியத் திருவிளக்கு இவர். பெரியார் அவர்களோடு நெருங்கியிருந்து பணியாற்றியவர்களில் இவரும் ஒருவராவார். இயக்கத் தோழர்களிடையே ஒற்றுமையைக் கட்டிக் காக்கும் உள்ளங் கொண்டவர். 'திராவிடன்' எனும் வார இதழின் ஆசிரியர். குன்றத்தூர் போராட்டம், மும்முனைப் போர், இந்தி எதிர்ப்பு—முதலிய பல போராட்டங்களில் ஈடுபட்டு சிறை சென்றவர். சொந்த ஊர் சென்னை.

★

சடமை, கண்ணியம், கட்டுப்பாடு — என்கிற அண்ணாவின் பொன்மொழிகளை ஏற்று, அரசியல்-சமுதாய-பொருளாதார முன்னேற்றங் காணும் புதிய திராவிடத்தை அமைத்திடுவோம் வாரீர்! வாரீர்!" என அழைக்கும் தி. மு. கழகத்தின் பாசறை வீரர்களின் பட்டியல் பாரீர்!

படை பெருக்க வாரீர்! வடவர் தடை நொறுக்கி-ஆரியக் கடை அடைக்க முழங்குவீர் முரசம் எட்டுத் திக்கிலும்!

குழு அமைக்கப்பட்டது!
செயற்குழு உறுப்பினர்கள்-15 பேர்.



அறிஞர் அண்ணா,
காஞ்சிபுரம்.

தி. மு. கழகத்தின் முதல் பொதுச் செயலாளர். விடுதலைப் போரின் ஒவ்வொரு அத்தியாயத்திலும் அண்ணாவின் பெயர் கம்பீரமாக ஒலித்துக் கொண்டிருக்கிறது. முதல் இந்தி எதிர்ப்புப் போரிலே ஆறு மாதக் கடுங்காவல் தண்டனை ஏற்று, பின்னர் பலமுறை சிறை சென்று அடக்குமுறைகளுக்கு ஆளானவர்.

சம்பத், ஈரோடு.

பெரியாருக்குப் பெரியாரின் புதல்வர். மும்முனைப் போராட்ட சமயத்தில் கல்வித் திட்ட எதிர்ப்புப் படைக்குத் தளபதியாக இருந்து சிறை சென்ற வீரர். கோவை மாவட்டத்திற்கு இரண்டாவது தடவையாக மாவட்டச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்.

கருணாநிதி, சென்னை.

கல்லக்குடி போராட்டத் தலைவராயிருந்து, ஆறுமாதக் கடுங்காவல் தண்டனை பெற்றவர். 'முரசொலி' எனும் வார இதழின் ஆசிரியர். சொந்த ஊர் திருக்குவளை. (தஞ்சை மாவட்டம்.)

மதியழகன், பி. ஏ.

தி. மு. கழகத்தின் துணைச் செயலாளராகப் பணி புரிந்தவர். திராவிட மாணவ முன்னேற்றக் கழக பொதுச் செயலாளராக இருந்து வருபவர். மும்முனைப் போரின் போதும், கவர்னர் ஜெனரல் கருப்புக்கொடியின் போதும் கல்லூரியைத் துறந்து சிறை சென்ற காளை. சொந்த ஊர் கணியூர். (கோவை மாவட்டம்.)

சிற்றரசு

சுயமரியாதை இயக்க காலத்திலேயிருந்து நாட்டு சுற்றிகேடு களையப் பணி புரியும் மாவீரன். எதையும் தாங்கும் இதயம் படைத்த இரும்புநெஞ்சன். 'தீப்பொறி' 'தீச்சுடர்' எனும் ஏடுகளின் ஆசிரியர். கல்லடிகள்—சொல்லடிகள்—காராக்கிரகங்கள்—களிப்போடு ஏற்கும் பண்பு கொண்டவர். சொந்த ஊர் வேலூர்.

ஆசைத்தம்பி

அடக்குமுறை ஆட்சியின் கீழ் சிறை புகுந்து அரசாங்கத்தாரால் மொட்டை அடிக்கப்பட்டவர். கல்வித் திட்ட போராட்டத்தில் சிறை புகுந்தவர். 'தனி அரசு' வாரஇதழின் ஆசிரியர். விருதுநகர் தந்த வீரன்.

சத்தியவாணிமுத்து

கல்வித் திட்டப் போரின் போது, பூர்ண கர்ப்பவதியான இந்த அம்மையார், ஆச்சாரியார் வீட்டுக்கு முன் மறியல் செய்து சிறை புகுந்தவர். (திராவிட இயக்கத்தில் நீண்ட காலமாகப் பணியாற்றி வருகிறார்) சொந்த ஊர் சென்னை.



நீலமேகம், குடந்தை

சுயமரியாதை இயக்கத் தொடக்க கால முதல் பெரியார் அவர்களின் அன்புக்கும் நன்றிக்கும் பாத்திரமாகிப் பல பணிகள் புரிந்த பெருந்தகையாளர். தஞ்சை மாவட்டச் செயலாளராக இருந்து நற்றொண்டுகள் பல ஆற்றியவர்.

ஜி. பி. சோமசுந்தரம்

அல்லும் பகலும் கருஞ்சட்டையுடன் காணப்படும் கொள்கைக் கிழவர். சேலம் மாவட்ட செயலாளராக இரண்டுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார். (சொந்த ஊர் பேளுக்குறிச்சி.

அன்பில் தர்மலிங்கம்

திருச்சி மாவட்ட செயலாளராக இரண்டாவது முறை தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர். திருச்சி மாவட்ட ஆட்சிமன்ற உறுப்பினராக, ராஜா சிதம்பரத்தை தோற்கடித்து வெற்றி பெற்றவர். கல்லக்குடிப் போரில் சிறை சென்றவர். ஜெங்கம்



எஸ். முத்து

மதுரை மாவட்ட செயலாளர். தியாகத் தழும்புகள் பல பெற்றவர். செயல் சிங்கம். மதுரை மாவட்டம் பெற்றெடுத்த மாணிக்கம். சிறைப் பறவை. சொந்த ஊர் மதுரை.



கே. வி. கே. சாமி

திருநெல்வேலி மாவட்ட செயலாளர். தூத்துக்குடி மாநாட்டின்போது பெரியாரால் வருங்கால 'கவர்னர்ஜெனரல்' என்று பாராட்டப் பெற்றவர். தூத்துக்குடி உப்பளத் தொழிலாளர்களின் தலைவர். பலமுறை சிறை சென்றவர். சொந்த ஊர் தூத்துக்குடி.



வி. எம். ஜான்

நாஞ்சில்மாவட்டச் செயலாளர். திரு-கொச்சி அறப் போரில் ஈடுபட்டதால் அடக்குமுறைக்கு ஆளானவர். சொந்த ஊர் நாகர்கோயில்.



இரா. சாம்பசிவம்

தென்னாற்காடு மாவட்ட செயலாளர். பெரியாரின் பாராட்டுதல்களைப் பெற்று திராவிடர் கழகத்தில் பணியாற்றி[illegible] சொந்த ஊர் குறி[illegible]

சி. வி. எம். அண்ணாமலை

செங்கற்பட்டு மாவட்ட முன்னாள் செயலாளர். காஞ்சி நகராண்மைக் கழக உறுப்பினர். அடக்குமுறைக் கணைகளுக்கு ஆளான செயல் வீரர். கல்வித் திட்டப் போரில் சிறை சென்றவர்.

போராட்டம்.....

★ 5-ம் பக்கத் தொடர்ச்சி

ஆமோதிப்பின் அறிகுறியாக அவள் பக்கம் சற்று சாய்ந்தும் உட்கார்ந்தார்.

காதலியின் புன்முறுவலால் புளகாங்கிதமடைந்த காதலன், அவள் கைகளை வாஞ்சையோடு பற்றி அருகில் இழுக்கிருன். சுந்தரத்தின் கையை அருகிலிருந்த வளையல்களணிந்த கையொன்று பற்றியது. தாங்கமுடியாத உடல் எரிச்சலாய் தவிக்கும் ஒருவன் தண்ணீரைக் கண்டதும் எப்படி ஆவலாகத் தாவிடுவானே, அதே வெறியோடு சுந்தரம் அந்த மென்கரங்களை அழுத்திப் பிடித்துக் கொண்டார்.

படம் ஓடியது. படத்தில் காதலனும் காதலியும் ஒருவரையொருவர் நெருங்குகின்றனர். கண்கள் ஒன்றையொன்று கவ்வி விழுங்குகின்றன — சுந்தரத்தின் கைகள் மெதுவாக அந்தப் பெண்ணின் இடுப்பைச் சுற்றி வளையமிட்டன.

அந்த 'இரவழகி' சுந்தரத்தின் மீது இப்பொழுது உரிமையோடு உராய்ந்தாள். பல நாட்கள் அவிழ்த்துவிடப்படாமல் கட்டி வைக்கப்பட்டிருந்த நாய் திடீரென்று அவிழ்த்துவிடப்பட்டால் அங்குமிங்கும் வெறிபிடித்து ஓடுவது போல, சுந்தரத்தின் உள்ளத்தில் இதுவரை கட்டிவைக்கப் பட்டிருந்த உணர்ச்சிகள், கட்டவிழ்த்துக் கொண்டு வெறியாட்டம் போட்டன. அந்தப் பெண்ணின் 'இன்பஸ்பரிசம்', பதினைந்து ஆண்டுகள் அவர் அனுபவிக்காத புதிய உணர்ச்சியாக இருந்தது!

திரையில் காதலனும் காதலியும் கட்டித் தழுவிக் கனியமுதம் பரிமாறிக் கொண்டனர். சுந்தரம் மதுவுண்ட மந்திபோல் ஆனுர். அவருடைய கை அந்தப் பெண்ணின் தோள்களின் மேல் வளைந்து விளையாடியது. மற்ருெரு கை அவளுடைய கன்னங்களை வருடியது. அவர் 'தேவ இன்ப'த்தில் திளைத்துக் கிடந்தார்!

"அப்பா...!"

சுந்தரம் திடுக்கிட்டுப் போனுர். தேவலோகத்தில் விசுவாமித்திரத் திருவிளையாடல் புரிந்து கொண்டிருந்த அவர், திடீரென பூலோகத்தில் வந்து தலைகுப்புற விழுந்தார்.

"அப்பா;...,அப்பா...!"

சுகுணு விழித்துக் கொண்டாள்!

"கண்ணே, சுகுணு...!"

சுந்தரத்தின் இந்த இரண்டு வார்த்தைகளில் விரகதாபத்தின் வேகமில்லை—பாசத்தின் குழைவு இருந்தது!

"அப்பா; அம்மா வராப்போலே கனுக் கண்டேம்பா...நம்ம அம்மா மாதிரியே அப்பா...வீட்டிலே மாட்டியிருக்கிற படத்திலேஉள்ள அம்மாவே தாம்ப்பா... என்னைத் தூக்கி முத்தம்கூடக் கொடுத்தாப்பா...ஆம்மாதானப்பா, அது!"

சுந்தரம் பதில் பேசவில்லை. அவர் கண்களிலிருந்து ஊற்றெடுத்து ஓடிய கண்ணீர் சுகுணுவின் முகத்தை நனைத்தது.

"ஏம்ப்பா அழறே?..."

"இல்லையடா கண்ணு...உனக்குப் பசிக்கலே? வீட்டுக்குப் போவோமா?"

"போலாம்ப்பா...படம் நல்லாவே இல்லே..."—படம் பார்க்காமலேயே குழந்தை தீர்ப்பளித்த சுகுணுவைத் தூக்கிக் கொண்டு, கொட்டகையின் இருளிலிருந்து சுந்தரம் வெளியே வெளிச்சத்தை வந்தடைந்தார்.

அவரது உள்ள வானில் கூடி நிறைந்து உறுமிக் கொண்டிருந்த மேகக் கூட்டம் கலைந்து, இப்பொழுது அவர் உள்ளம் களங்கமற்று இருந்தது. அந்த 'மேக்அப்' அழகியோ சுந்தரத்தைப் பரிதாபத்தோடும், சுகுணுவைக் கோபத்தோடும் ஒருமுறை பார்த்துவிட்டு புது மனிதர் ஒருவரைத் தேடி, கொட்டகையில் அவள் பார்வையை அலையவிட்டுக் கொண்டிருந்தாள்!

★

இம்மாதிரி வாழ்க்கையில் ஏற்பட்ட எத்தனையோ சோதனைகளை அவர் வென்று விட்டார். ஆனுல் சில தினங்களாக அவர் உள்ளத்தில் நிழலாடும் எண்ணங்களை எவ்வளவோ முயன்றும் அவரால் மறக்க முடியவில்லை.

சுகுணு இப்பொழுது குழந்தையல்ல; பதினெட்டு வயது நிரம்பிய அழகிய மங்கை. அவளுக்குத் திருமணமாகிவிட்டால், வாழ்க்கையின் ஒரே ஆறுதலும் போய் விடுமே என்ற சஞ்சலம் அவரைக் கப்பிக் கொண்டது. இரண்டு மாதங்களுக்குமுன் அவர் வீட்டுக்கு எதிர் வீட்டில் புதிதாக ஒரு பெண் வந்து குடியேறினுள். அவளுக்குச் சுமார் முப்பது வயதிருக்கும். வாலிப வனப்பு அவள் உடலைவிட்டு நீங்காமலிருந்தது. தளதளப்பான அந்த உடலின் வசிகரத்தில், மனைவியை இழந்த சுந்தரத்தின் மனம் ஈடுபட்டது. அந்த எதிர்வீட்டுக்காரி திருமணம் ஆகாதவள் என்பதையும், அவள் ஒரு பள்ளி ஆசிரியை என்பதையும், "மிஸ். நிர்மலகுமாரி பி. ஏ., எல். டி" என்று பெயர் எழுதப்பட்டு வெளியே தொங்கிய போர்டு அறிவித்தது. அவள் வந்ததிலிருந்து சுந்தரம் வெளிவிவகாரங்களைக் குறைத்துக் கொண்டு, வீட்டிலேயே பெரும்பகுதி நேரத்தைக் கழிக்கலானுர். அந்தப் பெண்ணும் பள்ளி நேரம் போகப் பாக்கி நேரத்தை ஜன்னலண்டையில் உள்ள சாய்வு நாற்காலியிலேயே போக்கினுள்.

முதலில் இருவருடைய கண்களும் புரியாத சேதியொன்றை பேசிக் கொண்டன. பின் வாய் வரலாறு விசாரித்தது. நாட்கள் செல்லச் செல்ல நட்பு வளர்ந்தது! சுந்தரத்தின் மனதில் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மனைவியின் மரணம் ஏற்படுத்திய சூன்யத்தை —சுகுணுவால் நிரப்ப முடியாத சூன்யத்தை—நிர்மலகுமாரி நிரப்பினுள். சுகுணுவிடம் சுந்தரம் பொழிந்த அன்பு, தந்தையின் கடமை—பாசம் என்ற கூட்டுணர்ச்சியின் விளைவு; நிர்மலகுமாரியிடம் அவர் கொட்டிய ஆசை அவரது தேவையின் விளைவு!

மகளுக்குச் செய்ய வேண்டிய கடமையில் கொஞ்சமும் வழுவாமல் இத்தனை ஆண்டுகளையும் ஓட்டி விட்டார்.

அவருடைய இதய ஆழத்தில் படிந்து போயிருந்த விரக தாபத்தைச் சதா கோல் கொண்டு கிளறிக் கொண்டிருந்தாள் எதிர்வீட்டு நிர்மலகுமாரி. அவளைத் தன் நினைவிலிருந்து அகற்ற படாத பாடுபட்டார். புண்ணில் வந்து மொய்க்கும் ஈக்களை எவ்வளவு விரட்டினுலும் அவை மீண்டும் மீண்டும் வந்து மொய்ப்பது போல, அவளைப் பற்றிய எண்ணங்கள் அவர் மனத்தை எப்பொழுதும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. மனிதன் எதை மறக்க வேண்டுமென்று நினைக்கிருனே, அவைகள் தானே அவன் மனத்தில் அழியாமல் நிலைத்து விடுகின்றன?

★

ஒரு நாள் மாலை—

சுந்தரம் சுகுணுவை அழைத்தார். அவர் முகத்தில் குழப்பம் குடி கொண்டிருந்தது.

"அம்மா, உன்னிடம் சில தினங்களாகவே ஒரு விஷயத்தைப் பற்றிக் கேட்கவேண்டுமென்றிருந்தேன்...". என்ற பீடிகையோடு ஆரம்பித்தார். சுகுணு, அவர் முகத்தைக் கேள்விக் குறி தோன்ற நோக்கினுள். "சுகுணு, உனக்கோ வயதாகி விட்டது. உனக்குத் திருமணம் செய்யாமல் நாளைக் கடத்துவது சரியல்ல; நல்ல வாலிபனைப் பார்த்து, உனக்கு சீக்கிரமே திருமணம் செய்ய உத்தேசித்து விட்டேன். உன் மனதுக்குப் பிடித்து, யாராவது ஒருவரைத் தேர்ந்து எடுத்திருந்தால் அதையும் சொல்; உன் விருப்பப்படி நடக்க எனக்கு மறுப்பில்லை..."

சுகுணுவின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. "உன் திருமணம் ஒன்றுதானே என்னுடைய கவலையெல்லாம். அதுவும் முடிந்து விட்டால் என்னுடைய கொஞ்ச காலத்தை அப்படியும் இப்படியுமாகக் கழித்து விடுவேன்"—முகத்தில் வழிந்த வியர்வையைத் துண்டால் துடைத்துக் கொண்டே அவளைப் பார்த்தார்.

"ஏனப்பா, நான் திருமணம் செய்து கொண்டு கணவரோடு போய் விட்டால் நீங்கள் தனிமையாகத்தானே வாழ்க்கையைக் கழிக்க வேண்டும்?"—அவள் குழந்தை போலப் பேசினுள்.

அவள் பேச்சு அவருக்கு தர்ம சங்கடமாக இருந்தது. "ஆமாம்; நான் தனிமையாகத்தான் இருக்க வேண்டும். அது தவிர்க்க முடியாத விஷயமல்லவா?" என்று பதில் சொல்ல அவரால் முடியவில்லை. உள்ளத்தில் அலைமோதிய எண்ணங்களை வெளியிட அவருக்கு ஏனே தைரியம் பிறக்கவில்லை. பலர் முன்னிலையில் குற்றத்தை வெளியிட வெட்கப்படும் குற்றவாளியின் மனநிலையில் இருந்தார்.

"தாரமிழந்தவன் தனிவாழ்க்கை நடத்த வேண்டுமே என்பதற்காக, உன் திருமணத்தை எவ்வளவு நாளைக்கம்மா ஒத்திப் போட முடியும்?"—இதற்குப் பின் அவர் விட்ட பெருமூச்சில் எத்தனையோ எண்ணங்கள் தொக்கி நின்றன.

"எனக்குக்கூட இப்பொழுதுதானப்பா அம்மா இருந்தால் நன்ருக இருக்குமென்று தோன்றுகிறது."

அவர் பதில் பேசவில்லை. அவர் கண்களில் நீர்த் திரையொன்று மறைத்தது!

"ஏனப்பா, எனக்குத் திருமணம் ஆகிவிட்டால் நம் வீட்டைக் கவனிக்கப் பெண் வேண்டாமா?... ஹூம், நீங்கள்தான் இரண்டாந் தாரமாகத் திருமணம் செய்து கொண்டால் என்ன?"

○ தொடர்ச்சி 10-ம் பக்கம்



கடல் கடந்தோர் கடிதம்

மலாயா

அன்புள்ள ஆசிரியருக்கு,

கடல் கடந்த நாட்டிலும் களி தீர்க்கும் வகையில், எங்கள் முன் எழில் முகம் காட்டி, இலட்சிய கீதம் பாடியபடி பறந்துவரும் 'முரசொலி'யெனும் புரட்சி ஏடை பார்க்கும்போது, உள்ளம் பூரிக்கிறது,முழுமதியைக்கண்டு பொங்கும் மாகடலைப் போல.

10-6-55 முரசொலியில் "கல்லும் பேசுமோ காண்" – என்றதைப் பார்த்தேன். சித்தத்திலே பித்தமேறிப் பிதற்றும் சின்னதுகளின் மூக்கை யறுக்கிறது. 'நில் நண்பா; எங்கே ஓடுகிருய்?' என்ற சுயமரியாதைக்காரனின் வார்த்தைகள், சதிகாரர்களின் மூக்கை உடைத்து சுக்குநூருக்குகிறது.

அண்ணுவின் கம்பராமாயண சொற்போர் வெற்றியைக் கண்ட பின்னும், கம்பரது டோஸ்களை அருந்திய பின்னும், அறிவு தெளியவில்லை ஒரு கூட்டத்தாருக்கு. தங்களின் புராண போதை தெளியும் அறிவுரைகளைப் படித்த பின்னும், முரசொலியின் மகாபாரதத் தொடர் சித்திரத்தை கண்ட பின்னும் இராமாயணத்தை ரசிப்பவன் தான் கலைஞன் என்ற விவேகமற்ற சித்தாந்தம் தெளியவில்லை.

அங் ... மயங்கிய ... இந்தப் பிதற் ... நாங்கள் ஒரு நாடகம் நடத்த எண்ணினேம். சி. பி. சிற்றரசுவின் போர் வாளை நடிக்கப் போகிருேம் என்ருேம். புயலெனச் சீறினுர்கள். ஆஸ்திகத்திற்கு ஆபத்தென்றலறினர். அதிகாரிகளுக்கு அபயச் செய்திகளனுப்பினர்.

நாடகக் குழுவினரில் ஒருவர் 'கலப்படம்'என்ற 'திரும்பிப்பார்' இசையை பாடிக்கொண்டு சாலையோரம் சென்றவர் வலிய வம்புக்கிழுக்கப்பட்டார். அதன் காரணமாய் அவரை கோர்ட்டுவரை அழைத்தனர். கலப்படம் பாட்டை நீதிபதி முன் பாடிக் காட்டி எதிரியின் முகத்தில் கரி பூசிவிட்டுக் கிளம்பினுர் வீட்டுக்கு, அந்தத் தோழர். குழப்பம், கொந்தளிப்பு ஏற்படவே எங்கள் நாடகத்தை நடத்தக் கூடாதென்று அதிகாரிகள் கூறிவிட்டனர்.என்ன செய்வது? மறுக்க முடியுமா, மாற்ருன் நாட்டிலே குடியேறிய போது? தாயகம் விடுதலை பெற்று சுதந்தர மனிதனுகத் துடிக்கும் தனயன்களை அன்புக் கரம் நீட்டி அணைத்துக் கொள்ளுவது என்றைக்கு? எத்தனை காலந்தான் பிடிக்கும் எண்ணத்தை வெளியிடும் உரிமை பெற? அடிமை போன்ற நிலை ஒழிய?

பி. கே. கலையழகன்
சிலாங்கூர்
மலாயா.

கொள்கை வளருது கோபுரம் போலே!

சென்னையில் பாராட்டுக் கூட்டம்

22-7-55 வெள்ளி மாலை 6 மணிக்கு, வண்ணை, பாண்டியன் படிப்பகச் சார்பில், வண்ணை பாண்டியன் திடலில் (கல்லறை மைதானம்) புதிய தி. மு. கழக துணைப் பொதுச் செயலாளருக்கு பாராட்டுரை வழங்கப்படும். தோழர் கே. எம். கண்ணபிரான் தலைமையில், கவிஞர் கண்ணதாசன், தோழியர் தேசியமணி ஆகியோர் பேசுவர்.

அய்யம்பாளையம்

22-7-55 வெள்ளி மாலை 5 மணிக்கு, தி. மு. க. துவக்க விழா நடைபெறும். தோழர்கள் ஈ. வெ. கி. சம்பத், எஸ். அப்பாவு-ஆகியோர் பேசுவர்.

முள்ளிப்பட்டு

23-7-55 சனி மாலை 6 மணிக்கு, ஆரணி முள்ளிப்பட்டு பகுத்தறிவு மன்றத்தின் முதலாண்டு நிறைவு விழா நடைபெறும். தோழர் எஸ். எஸ். முருகேசன் தலைமையில், தோழர்கள் தென்னரசு, மாணிக்கவேலு, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, ராதாகிருஷ்ணன்-ஆகியோர் பேசுவர்.

சென்னை

24-7-55 ஞாயிறு மாலை 6 மணிக்கு, இராயபுரம் ஆதம் சாயபு தெருவில், வடசென்னை குறள் நெறி கழகத்தின் சார்பில் "திருவள்ளுவர் திருநாள்" கொண்டாடப்படும். தோழர்கள் க. அன்பழகன், கவிஞர் கண்ணதாசன், புலவர் நன்னன், வண்ணை தியாகராயர் கல்லூரித் தலைவர் சண்முகம்-ஆகியோர் பேசுவர்.

சென்னை (5-வது வட்டம்)

26-7-55 செவ்வாய் மாலை 6 மணிக்கு, வண்ணை லாலா குண்டா தோட்டத்தில், தோழர் இரா. இளந்தென்றல் தலைமையில், தோழர் சி. பி. சிற்றரசு, தோழியர் சத்திய வாணிமுத்து-ஆகியோர் பேசுவர்.

திருவள்ளுவர் திருநாள்!

ஜூலை 25-முதல் 31-வரை வள்ளுவர் வாரம்.

குறள் நெறிக் கழகத்தார் வேண்டுகோள்!

தாய்த் திரு நாட்டோரே!

வள்ளுவனின் வான் புகழை, தனிப் பெருமையை, உலகியல் கற்ற பேரறிவை, புலமைத் திறத்தை, பொதுமை நோக்கத்தை, நடுநிலை இகவா நீதியை அறிஞர் உலகு நன்கறியும். இமிழ் கடல் எல்லைத் தமிழகத்திலே பிறந்து, வாழ்ந்த வள்ளுவர், அமிழ்தினும் இனிய தமிழிலேயே அறம் பாடி, தம்மினத்திற்கே அழியாப் பெருமை தேடித் தந்திருப்பினும், இன்றைய தமிழர் அவனை அறிவர்; அவன் புகழை உணர்வர்; அவன் கண்ட நெறியிலே நிற்பர் என்று கூறவோ வழியில்லை. இன்றும் பெரும்பாலோர், நீடுதுயில் நீங்கா நிலையிலேயே ஆழ்ந்துள்ளனர்.

அந்த நீடு துயில் நீங்கப் பாடி வரும் பகலென்ன ஒளிரும் வள்ளுவரை, நாடறியச் செய்யவே—வள்ளுவர் திருநாள் இன்றியமையாததாகிறது. எனவே தான், இரண்டு ஆண்டுகட்கு முன்பு, (பு)ரசை, குறள் நெறிக் கழகம், ஜூலை இறுதி வாரத்தை வள்ளுவர் வாரமெனக் கொண்டாடத் தீர்மானித்தது. அடுத்து, 11—7—54 அன்று, அண்ணாமலை நகரில், உயர் திரு நாவலர், ச. சோ. பாரதியார் தலைமையில் கூடிய சென்னை மாநிலத் தமிழாசிரியர் மாநாட்டிலும், ஜூலை இறுதி வாரத்தில் (ஞாயிறு அல்லாத) ஒரு நாளைத் திருவள்ளுவர் திருநாளெனக் குறித்து, சென்னை அரசியலார் பொது விடுமுறை அளிக்க வேண்டுமெனவும், அந்த வாரத்தையே வள்ளுவர் வாரமாகக் கொண்டாடவேண்டுமென்றும் ஒருமனதாகத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. சென்ற ஆண்டில் பற்பல இடங்களிலும் இதனைத் தழுவி விழாக் கொண்டாடியுள்ளனர். மேலும், 26-12-54-ல் மதுரையில் டாக்டர் மா. இராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற குறள் மாநாட்டிலும், 16, 17-4-55 நாட்களில், சேலத்தில் திருவாளர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்த 'திருவள்ளுவர் நினைவு நாள்' மாநாட்டிலும், 14, 15-5-55 நாட்களில் பெங்களூரில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தலைமையில் நடைபெற்ற திருக்குறள் மாநாட்டிலும், ஜூலை இறுதி வாரத்தையே உறுதிப்படுத்தி, ஜூலை 25-ந் தேதி அரசியலார் விடுமுறை வழங்கவேண்டுமெனக் கேட்டுத் தீர்மானங்கள் நிறைவேறி உள்ளன. மாநாடுகளில் கலந்து கொண்ட அறிஞர்கள் பலரும் இதனை ஆதரித்துள்ளனர்.

திருவள்ளுவர் மாசி உத்தரத்தில் பிறந்தார், வைகாசி அனுடத்தில் மறைந்தார் என்று கொண்டு, அவற்றுள் ஒன்றைக் கொண்டாட வேண்டுமென்பது சைவ சமயவாதிகள் சிலரின் கருத்தாம். அவருள்ளும் சிலர், வைகாசி அனுடத்தைக் கொண்டாடச் செய்வதில் தனி முயற்சி மேற்கொண்டுள்ளனர். ஆனால் அவற்றை மேற்கொள்ள சைவப் பற்றும் பழமைப் பாசமும் தவிர வேறு தக்க சான்று ஏதும் இல்லை. வேறு சமயத்தைச் சார்ந்தோரும் இதனைப் பொது நோக்கமாகக் கொள்ள வழியில்லை.

'நாளும் கோளும் நல்லார்க்கு இல்லை' என்பது பழமொழி. அதன்படி கோள் சிறப்புக் காரணம் கொள்ளாது அந்நாளைக் கொள்வதெனினும், அதுவும் வேறு காரணங்களால் ஏற்புடையதாக அமையவில்லை. வைகாசி அனுடம் மே மாதத்திலும், மாசி உத்தரம் மார்ச்சு மாதத்திலும் வருவன. அக் காலங்களில், விடுமுறையும், தேர்வும் குறுக்கிடுவதால், கல்லூரி, பள்ளி மாணவ மாணவிகள், எந்த விழாவும் நடத்த வாய்ப்பே இல்லை.

அவர்களன்றோ இத்தகு விழாவினை நடத்திப் பயன் பெற வேண்டியவர்! அவர்களைவிடத் தகுதியும், உரிமையும், ஊக்கமும், உணர்ச்சியும், வாய்ப்பும், வசதியும் உடையவர்கள்தான் எவர்? இவ் விழாவினை இளைஞர் கொண்டாடக் கூடாவிடில் பயன்தான் என்ன? தமிழரின் உரிமை உணர்வு பொங்க, தாய் மொழிப் பற்று ஓங்க, தாயகத்தின் விடுதலை விரைய—மாணவர் உள்ளமன்றோ வள்ளுவர் வாழ வேண்டிய முதல் இடம்!

எனவே ஜூலை 25-வள்ளுவர் நாள், ஜூலை இறுதி வாரம் வள்ளுவர் வாரம் என்பது-கல்லூரிகளிலும், பள்ளிகளிலும், பொது இடங்களிலும் கொண்டாடுவதற்கு ஏற்ப அமைந்தது என்பதாலேயே-தமிழறிஞர், ஆசிரியர் அனைவராலும் ஒரு முகமாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே, இதனையே எல்லோரும் ஏற்று, ஒன்றுபட்டு கடமையாற்ற வேண்டுகிறோம்!

ஆண் பெண், ஆசிரியர் மாணவர், இளையர் முதியர், உழவர் ஊராள்வோர், முதலிய வெவ்வேறு நிலையினரும், வகையினரும்—பட்டி தொட்டி, நாடு நகரம், தெரு திண்ணை, பள்ளி கல்லூரி, படிப்பகம் மன்றம், வீடு வெளி, அலுவலகம் ஆடுமிடம், எங்கும் வள்ளுவர் விழா எடுக்கவேண்டும்! தமிழர் வாழும் வதியுமிடமெங்கும், தமிழ் ஒலிக்கும் இடமெல்லாம், இன உணர்வு பொங்கத் தமிழர் திருநாளாம் பொங்கலெனத் திருவள்ளுவர் திருநாள் திகழ வேண்டும்!

அறம் தழைக்க, பொருள் செழிக்க, இன்பம் கொழிக்க, குறள் நெறி நிலைக்க, வள்ளுவர் விழா எடுப்பீர் என வேண்டிக் கொள்கிறோம்! நன்றி மறவாதீர்! நல்லதைச் செய்யத் தவறாதீர்! வாழ்க வள்ளுவர்! வளர்க குறள் நெறி!

இங்ஙனம்,

க. அன்பழகன்,

(தலைவர், குறள் நெறிக் கழகம், புரசை.)

★ மகாபாரதம் - [கற்பு காத்த கட்டம்] - 14 ★



போராட்டம்.....

★ 8-ம் பக்கத் தொடர்ச்சி

அவள் உண்மையாகத்தான் பேசினுள். அவர் உள்ளத்திலே அது ஏனே சுருக்கென்று தைத்தது.

''ஊம், பார்ப்போம்'', என்ற பெருமூச்சுடன் அவர் எழுந்தார். அந்த மூச்சில் கலந்து வந்த எண்ணங்களின் மோதுதல்களை அவரைத் தவிர வேறு யார் உணர முடியும்?

✶

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகுதான், கதையின் ஆரம்பத்தில் குறிப்பிட்டபடி மேல்மாடியில் சுந்தரம் குழம்பிய உள்ளத்தோடு உலாவிக் கொண்டிருந்தார். பதினைந்து ஆண்டுகளாக அவர் மகளின் மேல் வைத்திருந்த ஆசைக்கும், சரீர சுகத்தை பூர்த்தி செய்து கொள்ள எழுந்த இச்சைக்கும் நடந்த அந்த முடிவில்லாத போராட்டம் இன்று ஒரு நெருக்கடியான கட்டத்தை அடைந்துவிட்டது.

''இதுவரை இதுபற்றிப் பேசாத சுகுணு இன்று ஏன் அந்தப் பிரச்சினையை நேரடியாகவே கிளப்பினுள்? ஊம், அவள் இன்னும் என்ன குழந்தையா, எனக்கு நிர்மலகுமாரியிடம் உள்ள நட்பைப் புரிந்து கொள்ளாமலிருக்க. அப்படியானுல் அவள் அன்னையின் இடத்தில் நிர்மலகுமாரி இருக்க மனமொப்புகிருளா? அல்லது என்னுடைய இச்சைப் பூர்த்திக்கு, தான் இதுவரையில் இடையூருக இருந்ததாக எண்ணி, தன்னுடைய திருமணமாவது அந்தப் பிரச்சினைக்கு முடிவு கட்டட்டும் என நினைத்து என் திருமணத்துக்குச் சம்மதம் அளிக்கிருளா?''— சிந்தனை நீண்டது; ஆனுல் குழப்பம் தெளியவில்லை.

வீட்டின் உட்புறத்தை நோக்கினுர். சுகுணுவின் அறையில் இன்னும் விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அவள் இன்னுமா தூங்கவில்லை? என்னென்ன சிந்தனைச் சுழல்கள் கிளம்பி அவள் அமைதியைக் கெடுத்தனவோ!

சுந்தரம் உலாவிக் கொண்டே இருந்தார். அவர் கண்கள் எதிர் வீட்டின் பக்கம் திரும்பின. விளக்குகள் எல்லாம் அணைந்து அந்த வீடு நிம்மதியாகக் காட்சியளித்தது. நிர்மலகுமாரி நித்திரா தேவியின் அணைப்பில் அடங்கி இருக்க வேண்டும். தந்தை—மகளின் பேச்சு அவள் காதுகளுக்கும் எட்டியிருந்தால், அவளும் இப்பொழுது மனதோடு போராடிக் கொண்டுதான் இருப்பாள்!

உலகமே உறங்கிக் கிடந்தது. சுந்தரத்தின் கண்முன் மூன்று பெண்ணுருவங்கள் மாறி மாறித் தோன்றின.

சுந்தரம் மாடியிலிருந்து கீழே இறங்கி மெதுவாகத் தன் அறையை நோக்கி நடந்தார். வழியில் சுகுணுவின் அறையில் மெதுவாக எட்டிப் பார்த்தார். நாற்காலியில் உட்கார்ந்தபடியே, மேஜையின் மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டு சுகுணு தூங்கிக் கொண்டிருந்தாள். மேஜையின் மீது விளக்கொன்று மங்கலாக எரிந்து கொண்டிருந்தது. சுகுணுவின் பொன்னிறக் கன்னங்களில் கண்ணீர் தாரையிட்டிருந்தது. மேஜைக்கு மேல் சுகுணுவின் தாய்—கோமளாவின் படம் தொங்கிக் கொண்டிருந்தது. அன்று வெள்ளிக் கிழமையென்பதும், அது அவர் மனைவி இறந்த தினம் என்பதும், படத்தைப் பார்த்தவுடன் அவர் நினைவுக்கு வந்தது.

ஒவ்வொரு வெள்ளிக்கிழமையையும், அவரும் சுகுணுவும் கோமளாவின் நினைவு நாள் அனுஷ்டிப்பது வழக்கம். இன்று ஏற்பட்ட மனக் குழப்பத்தில் அவர் அதை அடியோடு மறந்து விட்டார். சுகுணுவும் வழக்கத்துக்கு மாருக அதை அவருக்கு நினைவூட்டவில்லை. மாலையில் மகளோடு நடந்த பேச்சையும் இதையும் பொருத்திப் பார்த்து மனவேதனைப் பட்டார்.

படத்தையும் மகளின் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தார். இரண்டும் அவரிடம் துயரக் கதைகள் பேசின. மேஜையைக் கவனித்தார். கடிதம் ஒன்று கிடந்தது. சுகுணுதான் தன் தோழிக்கு எழுதியிருந்தாள். நல்ல பண்பிலே ஊறி வந்த சுந்தரம் பிறருக்கு எழுதப்பட்ட கடிதத்தைக் கையால் தீண்டவும் அச்சப்பட்டார். உணர்ச்சி பண்பாட்டை உடைத்தது. கடிதத்தை எடுத்துப் படித்தார்:

''பிரிய செல்வகுமாரி,

இத்தனை நாட்களாக உனக்கு நான் ஏன் கடிதம் எழுதவில்லை என்று கேட்டு எழுதியிருந்தாய். காரணம், இதுதானடி. என் நெஞ்சை அழுத்திக் கொண்டிருக்கும் பாரம் எதுவுமே செய்யவிடமாட்டேன் என்கிறது.

அப்பா என்னை எவ்வளவோ அன்போடு நடத்துகிருர். தாயில்லாப் பெண் என்று தாங்குகிருர். ஆனுலும் அம்மா இல்லாத குறை சதா என்னை வாட்டிக்கொண்டிருக்கிறது. சிறு வயதில்கூட இந்தக் குறையை நான் அதிகமாக உணரவில்லை. விவரம் தெரிய ஆரம்பித்த பிறகுதான், ''தாய் அன்பு'' என்ற தலைசிறந்த அன்பைப் பெறமுடியாத அபாக்யவதி என்பதை உணருகிறேன். அம்மா இல்லையே என்று ஏங்கும்பொழுது அம்மாவின் படம் ஒன்றுதான் எனக்கு ஆறுதலளிக்கிறது. வாய் திறந்து மட்டும் பேசிவிட்டால் அந்தப் படம் அம்மாவேதான். செல்வா, நான் சொன்னுல் நீ கேலி செய்வாய் — அந்தப் படம் என்னேடு எத்தனை முறை பேசியிருக்கிறது தெரியுமா? வீதியில் குழந்தைகள் அவர்களுடைய அம்மாவை 'அம்மா, அம்மா' என்று அழைக்கும்போது என் மனம் எவ்வளவு குளிர்ச்சியடையும் தெரியுமா? என் வாயும் என்னையறியாமல் 'அம்மா, அம்மா' என்று முணுமுணுக்கும். உடனே என்னையுமறியாமல் என் அறைக்கு ஓடி, அம்மாவின் படத்தின் முன் விழுந்து 'அம்மா, அம்மா' என்று ஆத்திரம் தீர அழுவேன். எத்தனையோ முறை 'அழாதே கண்ணு. சுகுணு' என்று அப்படம் ஆறுதலளித்திருக்கிறது. கண்டதற்கெல்லாம் கடவுளைக் காட்டும் கபோதிகள், எண்ணற்ற குழந்தைகளுக்கு அம்மா என்ற ஈடில்லாச் செல்வம் இருக்க, என்னிடமிருந்து அச்செல்வம் பறிக்கப்பட்டதைக் கடவுளின் ஓரவஞ்சனை என்று ஒப்புக் கொள்வார்களா?

என் நிலைதான் இப்படியென்றல் அப்பாவின் நிலையோ...அதை இப்பொழுதுதானடி புரிந்துகொள்ளுகிறேன். கடந்த பதினைந்து ஆண்டுகளாக அவர் பட்டிருக்கும் வேதனையை எண்ணிப் பார்த்தால், அதிலும் அவர் எனக்காகச் செய்திருக்கும் மகத்தான தியாகத்தை எண்ணிப்பார்த்தால், 'நான் ஏன் பிறந்தேன்?' என்று தான் தோன்றுகிறது. அவர் வாழ்க்கை மனப் போராட்டத்தில்தான் கழிந்திருக்க வேண்டும். அந்தப் போராட்டத்தை மிகவும் சிக்கலாக்கிவிட்டாள் எதிர் வீட்டுக்கு வந்திருக்கும் பள்ளி ஆசிரியை. அவள் வனப்பு அப்பாவை அவள் பக்கம் இழுத்து விட்டது. அவளோ......உடலழகோடு உள்ளத் தூய்மையும்இருந்துவிட்டால், பெண் ஒரு லட்சியப் பிறவிதான்.

எனக்குத் திருமணம் செய்ய அப்பா முடிவு செய்துவிட்டார். அவருக்கு இருந்த வாழ்க்கையின் ஒரு ஆதாரத்தையும் பிடுங்கிக் கொண்டு விட்டால்......? அந்த நிலைமையை நினைக்கவே எனக்குப் பயமாக இருக்கிறது. ஆகவே துணிந்து அப்பாவிடம் மறுமணம் செய்துகொள்ளும்படி நானே கூறிவிட்டேன். ஆனுல் அப்பாவின் மணமகள் அற்ற குளத்தில் அறும் நீர்ப் பறவை போன்ற நிர்மலகுமாரியாக இல்லாமல், அக்குளத்தில் ஆம்பலும் நெய்தலும் போல ஒட்டி உறவாடும் கோமளாவாக அமைய வேண்டுமே என்பதுதான் என் கவலை......நிர்மலகுமாரியின் மோகத்தில் அப்பா அம்மாவின் நினைவுநாளைக்கூட மறந்து விட்டார். அன்பு வளர்க்கும் பெண்ணுள்ளம்தான் சில சமயங்களில் ....''

கடிதம் முற்றுப் பெறவில்லை. அதற்குத் துணையாகத் திறந்த பேனு அருகில் இருந்தது! கடிதத்தைப் படித்த பின் சுந்தரம் தேம்பித் தேம்பி அழுதார். பதினைந்து ஆண்டுகளாக நடந்த மனப் போரில் ஆசை வென்று, அன்பு தோற்று விட்டதாக நினைத்தார். ''சுகுணு, உனக்குச் செய்யவேண்டிய கடமையிலிருந்து உன் அப்பா தவறமாட்டார். என் இதயத் திரையில் உருப்பெற்றுவிட்ட உன் அம்மாவின் ஓவியத்தின் மேல் படிந்த தூசி நிர்மல குமாரி. அதை இன்று நீ துடைத்துவிட்டாய்!'' என அவருடைய வாய் முணுமுணுத்தது.

''கோமளா, நீ என் மனைவி; சுகுணு என் மகள். உங்களைத்தவிர வேறெருவர் என்னிடம் உறவாட, சொந்தம் பாராட்ட உரிமையில்லை!''— படத்தோடு அவர் மனம் இப்படிப் பேசியது.

சலனமற்றுக் காணப்பட்ட அவர் முகத்தில் ஒரு புன்னகை தவழ்ந்தது. கடிதத்தை எடுத்து விளக்கின் மேல் பிடித்தார். அது எரிந்து கருகியது. அதோடு பதினைந்து ஆண்டுகளாக அவர் உள்ளத்தில் நடந்த அந்தப் போராட்டமும் எரிந்து சாம்பலாகியது!

★

ஆகஸ்டு முதல் நாள்!

வடவர் ஆதிக்கத்தின் மீது மூண்டுள்ள வெறுப்பை உணர்த்த- இந்தி மொழியைத் திணிக்கும் திட்டத்தை எதிர்க்கும் தாயகத்தின் குரலை முழக்க ஆகஸ்டு 1ம் நாள், திராவிடர் கழகத்தார் இந்திய தேசியக் கொடியை நாடெங்கும் கொளுத்துவதென தீர்மானித்திருக்கிருர்கள். திராவிட கழக ஆக்கியஸ்தர்கள் அனைவரும் அந்தப் போராட்டத்தில் பங்கு பெறுவார்கள் என்று தெரிகிறது.

பிறைவானம்...

★ 11-ம் பக்கத் தொடர்ச்சி

வனைத் தன் குதிரையில் ஏற்றிக் கொண்டான். தானும் ஏறிக் கொண்டான். 'உயிர் போனுலும் ரகசியத்தை எதிரியிடம் வெளியிடேன்' என்ற உறுதிகொண்ட சிறுவனை சித்ரவதை செய்ய — அதன் மூலம் உண்மையைக் கிரகிக்க அழைத்துச் சென்ருன்.

குதிரை பறந்தது. குறுக்கிட்ட மலையைக் கடக்க மலைப் பாறைகளில் பாய்ந்து ஓடியது. சிறுவனின் மனமும் அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தது. ''சித்ரவதை செய்வானுமே இவனது தளபதி! வேதனை தாங்காது — வலியின் கொடுமை சகிக்காது — திட்டம் என்னையும் அறியாமல் வெளிவந்துவிட்டால்... ?''-இப்படியெல்லாம் எண்ணினுன். 'என்ன செய்வது?' என்று யோசித்தான்.

குதிரை மலையில் மிகவும் உயரத்தில் சென்று கொண்டிருந்தது. சிறுவன் கீழே கவனித்தான். ஒரே பாதாளம்! நிறைய கூர்மையான பாறைகள்! சிறுவன் பயந்தான். ''சித்ரவதைக் கருவிகள் உன் வாயைத் திறக்கும்'' என்ற முரடனின் குரல் அவன் காதுகளில் ஒலித்தது. சிறுவன் எதுவோ முடிவு செய்தான். முரடனின் முகத்தை கவனித்தான். அந்தக் கொடியவனின் முகத்தில் கொலைவெறி தாண்டவமாடியது. ''ஆமாம்; அது ஒன்றே இவனிடமிருந்து தப்பிக்க வழி'' என்று முணுமுணுத்தது சிறுவனின் உதடுகள். மீண்டும் ஒரு முறை கீழே பார்த்தான். பாதாளம்—படு பாதாளம்! சிறுவன் 'சடா'ரென்று ஒற்றனின் கையை பலம் கொண்ட மட்டும் கடித்தான். ''ஆ'' என்று அலறிக் கொண்டே கையை விட்டான் அவன். அவன் பிடியிலிருந்து விடுபட்டான் சிறுவன். மறுகணம்... ஐயையோ! என்ன பயங்கரம்! குதிரை மேலிருந்து, பாதாளத்தைநோக்கிக் குதித்தான்! ''ஐயோ'' என்று அலறிவிட்டான் அந்த முரடன்கூட. இருட்டில் எதுவும் புரியவில்லை. ஆனுல், அவனது அலறலைத் தொடர்ந்து மீண்டுமொரு மரண அலறல் கேட்டது பாதாளத்திலிருந்து!

✶

ரகசியம் கிடைக்கவில்லை என்று வீரன் திரும்பினுன்—ரகசியத்தைக் காப்பாற்றி விட்டோம் என்ற மகிழ்ச்சியுடன் பாதாளத்தில் கிடந்தது சிறுவரின் சிதைந்து போன உடல்.

ஆனுல் ரகசியத் திட்டப்படி மறுநாள் போர் நடந்தது. எதிர்பார்த்தது வீண் போகவில்லை. கோரநாதன் தோற்ருன்; ஓடினுன்!

அழகு நாட்டிலே வெற்றி முரசு ஒலித்தது. ஆனுல் அதற்குக் காரணமாக இருந்த சிறுவனின் மரணமோ, 'அவன் ஒரு வீரன்'' என்று சொல்லிக் கொண்டிருந்தது!

—சொர்ணம்

பிறை வானம்

பிள்ளைகள் பகுதி...

அவன் ஒரு வீரன்!

முரசு ஒலித்தது.

படைகள் பாய்ந்தன.

குதிரைகள் பறந்தன.

யானைகள் பிளிறின.

வாட்கள் மோதின.

போர்! பயங்கரமான போர்! வீரர்களும், குதிரைகளும், யானைகளும் எழுப்பிய சப்தம் கோரமான இடியோசை போல் கேட்டது. சிதறிச் சேர்ந்து ஓடிய இரத்தம் மழைவெள்ளம் போல் தோன்றியது. ஆமாம்; அந்தச் சண்டை நினைக்க அஞ்சும் புயலைத் தான் நினைவுபடுத்தியது.

முத்துவர்மன்—நல்ல மன்னன். நேர்மையானவன். அழகுநாடு அவனது தேசம்.

கோரநாதன்—பெயருக் கேற்றபடி மிக மிக கெட்டவன். பக்கத்து நாட்டு அரசன். படையைப் பெருக்க வேண்டும்-அதைக் கொண்டு நாட்டைப் பெருக்க வேண்டும்-இந்த விபரீத ஆசை கொண்டவன்.

அந்த கோரநாதன்தான் முத்துவர்மனின் அழகுநாட்டின் மீது படையெடுத்துவிட்டான். அதன் பலன்தான் மேலே சொன்னது. போர்க்களம் பயங்கரமாகத் தோன்றியது. கையை இழந்தும், காலைப் பறிகொடுத்தும் வீழ்ந்து கிடந்த வீரர்களின் முனகல்—செத்துக் கொண்டிருந்தவர்கள் எழுப்பிய மரணக் கூக்குரல்—போர்க் கருவிகள் மோதிக்கொள்ளும்போது எழும்பும் சப்தம்—அப்பப்பா! என்ன பயங்கரம்! பார்க்க நெஞ்சு பதறும்—உடல் நடுங்கும்-கண்கள் கூசும்!

போதும்...போதும்! இனியுமா பார்க்க வேண்டும் அந்த கோரக் காட்சியை?... இத்துடன் நிறுத்திக் கொள்வோம்!

★

இரவு நேரம். முத்துவர்மனின் படைகள் தங்கியிருக்கும் கூடாரங்கள்!

சண்டை செய்த அலுப்பில் சோர்ந்து போய் தூங்கிக் கொண்டிருக்கிறார்கள் போர் வீரர்கள். சிலர் கூண்டுக்குள் அடைபட்ட சிங்கம் போல நடந்து கொண்டிருக்கிறார்கள்—அவர்கள் காவல் வீரர்கள். அமைதியான அந்த நேரத்தில் ஒரே ஒரு கூடாரத்திலிருந்து மட்டும் ஏதோ பேச்சுக் குரல் கேட்கிறது. எதுவும் காதில் விழவில்லை. போர்முனை ரகசிய மல்லவா, மற்றவர்கள் காதுகளில் விழும்படியாகவா பேசுவார்கள்? உள்ளே நுழைந்து பார்த்தால்...?

கூடாரத்திற்குள் அங்கும் இங்கும் நடந்து கொண்டிருக்கிறார் தளபதி. அவர் முகத்தில் ஒரே கவலை—சோகம்—பயம்! எதிரே குனிந்த தலை நிமிராதபடி சில போர் வீரர்கள். ஏன்? அந்த சோகக் காட்சிக்குக் காரணம் தான் என்ன?

அதோ, தளபதியே பேசுகிறார், கேளுங்கள்:

"வீரர்களே! இந்த நிலை நீடித்தால் நாளைப் போரின் முடிவு எப்படியிருக்கும் தெரியுமா?... நினைக்கவே என் நெஞ்சு நடுங்குகிறது! இதுவரை எவருக்குமே தலை வணங்காத அழகுநாடு, இந்த அக்கிரமக்கார கோரநாதனின் காலடியில் வீழ்ந்து விடலாம்... ஆமாம்; நம் வீரர்கள் சோர்ந்து விட்டார்கள். இன்று இரவுக்குள் வேறு ஏற்பாடு ஏதேனும் செய்யாவிட்டால், எனக்கும், என் மன்னனுக்கும், உங்களுக்கும், இதுவரை போரிலே உயிர் துறந்தார்களே, அந்த மாவீரர்களுக்கும் பெருத்த அவமானம்; சொல்லக் கூடாத வெட்கம்! என்ன செய்வது இப்போது?..."

தளபதி மீண்டும் நடந்தார். வீரர்கள் மௌனமாக நின்றார்கள். ஏதோ யோசித்துக் கொண்டிருந்த தளபதி 'சடா'ரென்று திரும்பினார். "வீரர்களே! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. தலைநகரில் எஞ்சியிருக்கும் படைகள் நாளை போருக்கு நமக்கு உதவ வேண்டும். சாதாரணமாக அல்ல; நான் நினைக்கும் ரகசிய ஏற்பாட்டின் படி எதிரிகளைத் தாக்க வேண்டும். அப்படித் தாக்கினால், அதை எதிர்பாராத கோரநாதனின் படைகள் தடுமாறும்; தத்தளிக்கும்; நிச்சயம் வெற்றி நமக்கே கிடைக்கும். அதற்கு ஒரே வழி—அந்த ரகசிய வழியேதான்!"—தளபதி வெறி பிடித்தவரைப் போலக் கத்தினார்.

"ரகசிய வழி"—இந்தச் சொற்கள் காதில் பட்டதும் வீரர்கள் விழித்தார்கள். "அந்த வழிதான் என்ன?" என்று ஏக காலத்தில் கத்தினார்கள்.

"இருக்கிறது வீரர்களே! முதலில் நான் சொல்லப் போகும் செய்தியை—அந்த ரகசிய திட்டத்தை இப்போதே அரண்மனைக்கு எடுத்துச் செல்ல வேண்டும்! அதற்கு யார் இப்போது புறப்படுகிறீர்கள்?"

கூடாரங்களைச் சுற்றி கோரநாதனின் ஒற்றர்கள் அலைகிறார்கள்—அரண்மனை போகும் வழியெல்லாம் அவர்கள் வேட்டை நாய்களைப் போலத் திரிகிறார்கள். அவர்களிடம் சிக்கி விடாமல் அரண்மனைக்குப் போய்ச் சேரவேண்டும், ரகசியத் திட்டத்தைச் சொல்ல. பொறுப்பான பணி — ஆபத்து நிறைந்த வேலை! எனினும் யாரேனும் புறப்படத்தானே வேண்டும்! இல்லையேல் நாளை அழகுநாடு அழிந்துவிடும்! என்ன செய்வது? "நான் தயார்! நான் தயார்!" என்று கிளம்பினார்கள் வீரர்கள்.

தளபதி பேசினார்: "தயார் என்று சொல்லி விடலாம், வீரர்களே! ஆனால் திட்டம் மன்னனிடம் தெரிவிக்கப்படா விட்டால்—அல்லது பகைவர்களிடம் சிக்கி விட்டால்—என்ன நேரும் தெரியுமா?"

வீரர்கள் மௌனமாக நின்றார்கள். அவர்களுக்குப் பயம் பிறந்து விட்டது!

"ஏன் மௌனமாகி விட்டீர்கள்? ஆபத்தைக் கண்டு அஞ்சுகிறீர்களா?"

மீண்டும் மௌனம்தான். ஆனால் அதே சமயம் மௌனத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு குரல் கேட்டது.

"தளபதி அவர்களே! நான் தயார்! இதோ, இப்போதே புறப்படுகிறேன்!"

தளபதி திரும்பினார். வீரர்கள் வியப்புடன் பார்த்தனர். அங்கு நின்றுகொண்டிருந்தான் ஒரு சிறுவன். பனிரெண்டு வயதுப் பாலகன்! அவன்தான் சொன்னான் மேலே கண்டபடி.

தளபதிக்கு சிரிப்பு வந்தது. "யார் தம்பி நீ? நான் விளையாடுவதற்கு ஆள் சேர்க்கவில்லையே!" என்றார்.

"சிரிக்க வேண்டாம், தளபதி அவர்களே! நானும் விளையாடத் தயார் என்று சொல்லவில்லை. உங்களது ரகசியத் திட்டத்தை நான் மன்னனிடம் தெரிவித்து வரமுடியும்!" —பையனின் குரலில் ஒரே ஆத்திரம்—படபடப்பு!

வீரர்கள் சிரித்தார்கள். பையனின் முகம் சிவந்தது.

"நீ யார் தம்பி?" —தளபதி கேட்டார்.

"நானா? கோரநாதனின் நாட்டாசைக்கு அப்பாவையும் அண்ணனையும் பறிகொடுத்து நிற்கும் அனாதை! கேளுங்கள். அவர்கள் இருவரும் அழகு நாட்டின் போர் வீரர்கள்; இன்றைய சண்டையிலே—நாட்டைக் காக்கும் நற்பணியிலே உயிரை விட்ட இலட்சிய வீரர்களாகி விட்டார்கள். ஆமாம்; வீரர்களே! அவர்களைத் தேடி வந்தேன் நான். தேடினேன்; காணவில்லை. ஆனால் தனியாக உருண்டு கிடந்த அவர்களது தலைகளைத்தான் கண்டேன்; கலங்கினேன்; கதறினேன். இனி நாட்டுக்கு என்னால் இயன்ற பணி ஏதேனும் செய்யவேண்டும் என்று எண்ணினேன்; ஓடி வந்தேன். கோரநாதனின் செருக்கழிக்க இங்கே வேலை காத்திருக்கிறது. கேட்கிறேன்...... 'தயார்' என்கிறேன்... நிச்சயம் ரகசியப் போர்த் திட்டத்தை மன்னனிடம் சேர்ப்பித்து விடுவேன். இது உறுதி!"

தளபதியின் கண்கள் கலங்கின. அந்தச் சிறுவனின் வீர மொழிகள் அவர் மனதைக் கவர்ந்தது. ஏதோ யோசித்தார். "தம்பி! நீ வேண்டும் வேலை எவ்வளவு அபாயகரமானது என்பது தெரியுமா?"

"தெரியும்..."

"உன் உயிருக்கும் மேலானது என்பதை உணர்வாயா?"

"உணர்வேன். என் உயிரைப் போல் காத்துக் கொண்டுசெல்வேன் திட்டத்தை..."

"மற்றொன்று...இந்தத் திட்டம் மன்னனிடம் சேர்ப்பிக்கப் படாமல், எதிரிகளிடம் சிக்கி விட்டால் என்ன ஆகும் தெரியுமா?..."

"தெரியும்! நான் கடமை உணர்ந்தவன்; நன்றாக அறிவேன்"

"இப்படி அருகில் வா"—தளபதி அச் சிறுவனை அருகில் அழைத்தார்; காதோடு எதுவோ சொன்னார்.

"புரிகிறதா தம்பி? இப்படியே சொல்லவேண்டும் மன்னரிடம்" என்றார் தளபதி. முகம் மலர "புரிந்து கொண்டேன்" என்றான் சிறுவன்.

அதே சமயம் கூடாரத்திற்கு வெளியே ஏதோ அரவம் கேட்டது. உருவிய வாளுடன் பாய்ந்தார்கள் வீரர்கள். எதுவும் புலப்படவில்லை. மீண்டும் உள்ளே நுழைந்தார்கள். ஆனால் அவர்களது கண்களில் சிக்காத கரிய உருவம் ஒன்று, தரையோடு தரையாக தவழ்ந்து ஓடியது.

சிறுவன் புறப்பட்டான். "மறந்து விடாதே தம்பி! அழகு நாட்டின் வாழ்வும், வீழ்ச்சியும் நீ சுமந்து செல்லும் ரகசியத்தில் தான் இருக்கிறது; கவனம்" என்றார் தளபதி. சிறுவன் கூடாரத்தை விட்டு வெளியே பாய்ந்தான். அரண்மனையை நோக்கி ஓடினான். அந்த இரவில்- குறுக்கு வழியிலே— மலைகளையும், மடுக்களையும் கடந்து ஓடிக்கொண்டிருந்தான்.

ஆனால், அதே சமயம் அந்தச் சிறுவனைக் கொத்திச் செல்ல, கோரநாதனின் கழுகுகள் வட்டமிட்ட வண்ணமிருந்தன.

அந்த ஒற்றர்களின் கண்களிலே சிக்காமல் சிறுவன் அரண்மனையை அடைந்தான். தகவல் ஏதும் வராதது கண்டு தடுமாறிக் கொண்டிருந்தார் அரசர். சிறுவன் சொன்ன திட்டம் கேட்டு பூரித்தார். தளபதியின் யோசனைப்படியே, நாளை படையைப் போர் செய்ய அனுப்புவதாக முடிவு செய்தார். சிறுவன் அரண்மனையை விட்டுப் புறப்பட்டான். மீண்டும் கூடாரத்தை நோக்கி ஓடினான்.

போகும்போது தப்பித்துக் கொண்டான. ஆனால் திரும்பும் போது...? வேட்டை நாய்கள் புது வேகத்துடன்—பொல்லாத கோபத்துடன் அல்லவா தேடுகிறார்கள்!

★

அமைதியான நள்ளிரவு — மூச்சுத் திணற ஓடி வந்துகொண்டிருந்தான் சிறுவன். அதே சமயம் "அதோ...அதோ..." என்றொரு முரட்டுக் குரல் கேட்டது. சிறுவன் திடுக்கிட்டான். மறு கணம் இரு முரட்டுக் கரங்கள் அவனை 'கப்'பென்று பிடித்தன. சிறுவன் நடுங்கினான். அவனைப் பிடித்தது, கூடாரத்திலிருந்து பதுங்கி ஓடினானே, அந்த கோரநாதனின் ஒற்றன்தான். சிறுவன் பயந்தான். ஆனால், அதே சமயம் திட்டத்தை எப்படியும் வெளியிட்டுவிடக் கூடாது என்ற முடிவுக்கு வந்து விட்டான்.

அப்புறம் என்ன? ஒற்றன் அந்தச் சிறுவனை என்னென்னவோ கேட்டான். ஆனால் அவனோ உண்மையைக் கடுகளவும் வெளியிடவில்லை. ஒற்றன் ஆத்திரம் கொண்டான். சிறுவனை அடித்தான்—உதைத்தான்— வதைத்தான்! மௌனம்தான் பதில்!

ஒற்றன் சற்று நேரம் யோசித்தான். "முட்டாளே! நீ என்னிடம் சொல்லமாட்டாய்! வா, என் தளபதியிடம்! அங்கிருக்கும் சித்ரவதைக் கருவிகள் உன் வாயைத் திறக்கவைக்கும்" என்றான். சிறு

★ தொடர்ச்சி 10-ம் பக்கம்

கேள்வி பதில்

'எழுத்தாணி'

இந்த வாரம் பரிசு பெறும் தோழர்:
(🏵) உரு. மணிவண்ணன்,
வேலங்குடி,
புலிவலம் (அஞ்சல்)
(தஞ்சை மாவட்டம்)

வேலப்பன்; சென்னை.

(?) பத்திரிகை நடத்துவதால் யாருக்கு அதிக லாபம்?

பணம் அனுப்பாத ஏஜண்டுகளுக்கு!

(🏵) மணிவண்ணன்: புலிவலம்.

(?) கயவர்களின் கடைசிப் புகலிடம் எது?

சாங்கிரஸ் கட்சியின் புதிய அங்கத்தினர் புத்தகம்!

க. சிதம்பரம்; சென்னை.

(?) உலக சமாதானத்திற்கு ஏதாவது குறுக்கு வழிகள் உண்டா?

உண்டு; அதைக் கண்டு பிடிக்கத்தான் ஆகாய வழியைத் தேர்ந்தெடுத்து வெண்புறுக்களைப் பறக்க விடுகிறார்கள்.

வி. கே. சிந்தனைச்சிற்பி;
வடகேப்பட்டி.

(?) சென்ற ஜனவரியில் நடந்த ஆவடி காங்கிரசுக்கும், 27 ஆண்டுகளுக்கு முன் சென்னையில் கூடிய காங்கிரஸ் மாநாட்டுக்கும் வித்தியாசம் என்ன?

பழைய மாநாட்டின்போது இட்லி சுடும் மிஷினுமில்லை-'இட்லர் தர்பாரு'மில்லை!

எஸ். மாரியப்டன்;
அருப்புக்கோட்டை.

(?) காமராசர் என்றால் அர்த்த மென்ன?

ஏஜண்டுகள் தேவை.

அழகிய காலண்டர்களுக்கு ஆர்டர்கள் எடுக்க ஏஜண்டுகள் தேவை.

ரூ. 15 முன்பணம் அனுப்பினால் ஆல்பம் வகையறு அனுப்பபடும். மூன்று ஆர்டர்கள் வாங்கிக் கொடுத்தபின், அந்த 15 ரூபாய் திருப்பித் தரப்படும்.

விபரங்களுக்கு:
நாதன் - கம்பெனி,
[காலண்டர் தயாரிப்பாளர்கள்]
திருச்சிராப்பள்ளி.

பல நிறங் காட்டும் "மேகவர்ணச் சேலை!"

சி. பி. நிலவழகன்;
திருவல்லிக்கேணி.

(?) மயிலை கபாலி குளத்தை சுத்தப்படுத்தக்கூடா தென்று பக்தர்கள் தீர்மானம் போட்டிருக்கிறார்களாமே—ஏன்?

சமுதாய சாக்கடையையே சுத்தப் படுத்தக் கூடாதென்று தடுத்து நிற்கும் "வீரர்"களல்லவா அவர்கள்! அதற்கு ஒரு எடுத்துக் காட்டுதான் இதுவும்.

எஸ். வி. ஏ. சின்னமணி-
தமுவினர்; மேலூர்.

(?) தி. மு. கழகம், ஒப்புக்கொள்ளும் தெய்வம் எப்படிப்பட்டது? அது எது? எங்கேயிருக்கிறது?

உலகை உய்விக்கும் ஒப்பற்ற சக்தி பெற்றது! அதன் பெயர் அன்பு! அது இருதயத்திலே இருக்கிறது!

தே. மு. க. சமான்; சென்னை-1.

(?) கோழையும் வீரனாவது எப்போது?

கொடுங்கோலரின் வெறிச் செயல்கள் குவியும்போது!

டி. எஸ். பழனியப்பன்;
தாடிக்கொம்பு.

(?) நேருவின் விளையாட்டு பொம்மை எது?

ஆகாய விமானம்!

ரா. சிதம்பரம்; உடுமலை.

(?) மந்திரிகள் தங்களையே மறப்பது எப்போது?

மாலை கழுத்தில் விழும்போது! மாற்றுக் கட்சியை வசை பாடும் போது!

பி. ஏ. காசிமலை; விருதுநகர்.

(?) வங்கக் கவி தாகூரும், கேரளத் தமிழ்க் குயில் சுந்தரனாரும், புரட்சிக்கவி பாரதிதாசனும், இன்னும் எண்ணற்ற வரலாற்று ஆசிரியர்களும், 'திராவிட நாடு' என்று நம் தாயகத்தை சுட்டிக் காட்டியும், அதைக் கற்பனை என்று கூறும் அரசியல் குருடர்களை விவாத மேடைக்கு அழைத்தால் என்ன?

அழைத்தால்—உடனே, அந்தக் குருடர்கள் செவிடர்களாகவும்—ஊமைகளாகவும் மாறி விடுகிறார்களே; என் செய்வது நண்பரே!

மு. அ மு. ம. முகம்மது மீராலெப்பை;
பாம்பன்.

(?) அரசியல் வானில் (மழை பெய்யாதபோதும்) அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பவர் யார்?

தமிழரசுக் கழகத்தைப் பற்றி எழுத வேண்டாமென்று நினைத்திருக்கும்போது, ஏன் தோழரே இப்படி கேள்வி கேட்டு உயிரை வாங்குகிறீர்?

வி. ஏ. கோபாலன்;
அவிசாவெல்லா, இலங்கை.

(?) வீரன் ஒருவன் எப்போது கண்ணீர் விடுவான்?

வெங்காயம் நறுக்கும்போது!

இளந்தென்றல்; தி. பெ. சாலை,
சென்னை-21.

(?) "இதற்கு (இந்தி எதிர்ப்புக்கு) மாறான தன்மையில் விடுதலையில் தலையங்கமும் குத்தூசியும் எழுதப்பட்டு வருகிறது—அதை நான் வரவேற்க முடியவில்லை. இந்தச் சந்தர்ப்பத்துக்கு பொருத்தமில்லாதது என்பதுடன், தேவையில்லாதது என்பதோடு, சந்தர்ப்பத்தை உணராதது என்றுகூட சொல்வேன்—இப்படிப் பல தடவை எனக்கு நேர்ந்து விடுகிறது." என்று 10—7—55 விடுதலையில் பெரியார் குறிப்பிட்டிருக்கிறாரே; அதுபற்றி தங்கள் கருத்தென்ன?

"அவசரசாமி" என்ற பட்டம் சரிதான் என்று பெரியார் ராமசாமி தந்த விளக்கம் அது!

து. மு. இராசு; அரியலூர்.

(?) உலகம் உருண்டை என்று சொல்லுபவர்களும், தட்டை என்று சொல்பவர்களும், சந்திக்கும் இடம் எது?

இரண்யாட்சன் கதை சொல்லும் தமிழ் ஆசானையும், கலிலியோ கதைசொல்லும் விஞ்ஞான ஆசானையும் வாழவிடுகிற பள்ளிகள்!

(?) அதிக அளவு பிரயாணம் செய்வது தான் அரசியல் தகுதிகளிலே ஒன்றா?

அப்படியிருந்தால் நேருவுக்குப் பதில் கிருஷ்ணமேனனல்லவோ பிரதமர் பதவி வகிக்க வேண்டியிருக்கும்!

(?) எங்கேயோ கையெழுத்தான கூட்டறிக்கைகளால் சிலரது கொள்கை மாறுபடும் போது, வானத்திலே ஏற்படும் வால் நட்சத்திரத்தினால் சிலரது வாழ்வு பாதிக்கப்படாதா?

வால் நட்சத்திரங்களைப் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் நிலவுக்கும் பைத்தியத்திற்கும் சம்பந்தமுண்டு எனகிறது விஞ்ஞானம்!

என். பிச்சு; அரகண்டநல்லூர்.

(?) லண்டனில் ஒரு இந்தியப் பெண் நேருவை முத்தமிட்டாரே; அவர் யார்?

வேறு யாருமல்ல; இலங்கையிலே 'பால் டான்ஸ்' ஆடி பாரதக் கலாச்சாரத்தைப் பெருமைப் படுத்திய விஜயலட்சுமி பண்டிதரின் பிரியக் குழந்தைதான்! அந்தப் பெரிய சீமாட்டி!

உங்கள் மடல்கள்

அன்புள்ள அண்ணா'
வணக்கம்.

தங்களின் பத்திரிகை ஆரம்பமானது முதல் இது நாள் வரை படிப்பவர்களில் நானும் ஒருத்தி என்பதை பெருமையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தங்களின் ஓரவஞ்சனையை அம்பலப் படுத்தாமல் இருக்க முடியவில்லை. தாங்கள் தங்கையின்மீது கோபித்தாலும் சரி! முரசொலியின் 12-பக்கங்களில் ஏதாவது ஒரு ஓரத்தில் வாரத்திற்கு ஒரு முறை மாதர் பகுதி சேர்த்து வந்தால், என் போன்ற சகோதரிகளுக்கு எவ்வளவோ சவுகரியமாக இருக்கும்!

'பிறைவானம்' போன்ற பிள்ளைகள் பகுதி எழுதி குழந்தைகளை மட்டும் திருத்திவிட்டால் போதும்; மாதர்கள் எக்கேடு கெட்டால் என்ன?-என்ற உதாசீனம் தங்களிடமிருப்பதை தங்கள் மனைவியார் எப்படித்தான் பொறுத்துக்கொண்டு இருக்கிறார்களோ?

இனியும் தாங்கள் மாதர் பகுதி ஒதுக்கவில்லையானால், என் கணவரிடம் சொல்லி 'முரசொலி' வாங்க வேண்டாம்; படிக்க வேண்டாம்;—என்று சாத்விக மறியல் செய்வேன்!

அன்புச் சகோதரி,
எல். ஜி. எஸ். சுலோசனா,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

★

அன்புடையீர்,
வணக்கம்.

"திராவிட முன்னேற்றக் கழகம் தமிழ் நாட்டில் மட்டுமே உள்ளது. ஆந்திரத்திலும் கேரளத்திலும் கிடையாது" என்று மாற்றுக் கட்சியினர் கூறி வருகின்றனர். அந்தக் கூற்று தவறு; கேரளத்துக்காரனும் அந்தக் குரலை எழுப்புகின்றான்-என்பதை உலகத்திற்குக் காட்ட வேண்டும் என்பதற்காக நாங்கள் கடந்த ஓராண்டு காலமாக பணியாற்றிவருகின்றோம். எங்களூர் (குத்தாம் புள்ளி) திரு-கொச்சி ஆட்சியிலுள்ள மலையாளப் பகுதி—அனைவரும் மலையாளிகளேயாவர். முதலில் 'முற்போக்குக் கழகம்' என்று (மலையாளத்தில்) துவக்கினோம். நடவடிக்கைகள் அனைத்தையும் மலையாளத்தில் தான் நடத்தி வருகின்றோம். தி. மு. க. கொள்கைகளைத்தான் பரப்பி வருகிறோம். முதலில் எதிர்ப்பு இருந்தது. பின்பு சரியாகி விட்டது.

சென்ற 4-7-55 அன்று, தி. மு. கழகத் தோழர் கோவை செழியன் அவர்களைத் தருவித்து, ஒரு பொதுக் கூட்டம் நடத்தினோம். மலையாளத் தோழர்களின் மனதிலே 'திராவிட நாட்டுப் பிரிவினை உணர்ச்சி' வளர்ந்திருப்பதை, அன்று கூடிய மாபெரும் கூட்டமே வெளிப்படுத்தியது. பக்கத்துப் பகுதியிலுள்ள மலையாளிகள் கழகத்தின் உண்மையை அறிந்து கழகத்தைத் தங்களூரில் அமைக்கப் போவதாக உறுதி கூறியுள்ளனர்.

—மு. வரதராசு,
செயலாளர், முற்போக்குக்கழகம்,
குத்தாம்புள்ளி

நாட்டிய கலாராணி படித்தேன். இன்னும் என் உள்ளத்தை விட்டு அகலவேயில்லை.

—எம். வி. தியாகராசன்,
செவ்வாய்ப்பேட்டை.

ஆசிரியரும், அச்சிடுபவரும், வெளியிடுபவரும் மு. கருணாநிதி. 'முரசொலி' அச்சகம், 4/128, மவுண்ட்ரோடு, சென்னை-6.